# உணர்ச்சி வெள்ளம்

பேரறிஞர் அண்ணா

225



அபிராமி பதிப்பகம்

XA:225 B-75

# உணர்ச்சி வெள்ளம்

பேரறிஞர் அண்ணா

அபிராமி பப்ளிகேஷன்ஸ்
307, லிங்கிச் செட்டி தெரு,
சென்னை-600 001.

முதற் பதிப்பு : ஜனவரி 1972
இரண்டாம் பதிப்பு : 1982
(c) அறிவுப் பண்ணை

43155

விலை ரூ. 5-00

அச்சிட்டோர் :

ராம்ஸ்ரீ பிரிண்டர்ஸ்
27, தெற்கு தண்டபாணி தெரு
தி. நகர், சென்னை-600 017.

# பதிப்புரை

மேடைத் தமிழுக்கு இலக்கணம் வகுத்தவர் பேரறிஞர் அண்ணா. கோடையிலே இளைப்பாறிக்கொள்ள வகை கிடைத்த குளிர்தருவைப் போல—ஓடையிலே ஊறிவரும் தீஞ்சுவைத் தண்ணீர் போல — அவரது மேடைப் பேச்சு விளங்குகிறது.

தத்துவச் சிந்தனையும் தமிழ் விருந்தும் பண்பாட்டு நலனும் அவரது சொற்பொழிவில் மிதந்து வருவதை அனை வரும் அறிவர். அவரது உரை — பலரைக் கவிஞர்களாக்கி யிருக்கிறது — இன்னும் பலரை நாடக ஆசிரியர்களாக்கி யிருக்கிறது.

தமிழக அரசின் முதல்வராக அவர் பொறுப்பேற்ற பின்னர் — அவரது சொற்பொழிவைத் தமிழகம் மட்டுமல்ல — இந்தியத் திருநாடே ஆவலுடன் கேட்கத் தொடங்கி யுள்ளது. அயல் நாடுகளிலும் அவரது புகழ் பரவி வருகிறது.

அவரது நா — அசைந்தால் அது நாதத் தமிலாக மலரு கிறது—இனிய சங்கீத அலையாக அது உருமாறி அனைவரை யும் ரசனை உலகுக்கு அழைத்துச் செல்கிறது.

அவர் தொட்டுப் பேசாத துறையில்லை. அவரால் பேசப் படாத பொருள், ஒரு பொருளே இல்லை..

தமிழக முதல்வராக இருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள் அவ்வப்போது பல விழாக்களிலும், பல திட்டங் களின் அறிமுக விழாக்களிலும் ஆற்றிய சொற்பொழிவுகளை எல்லாம் தொகுத்து **'உணர்ச்சி வெள்ளம்'** என்ற தலைப்பில் நூலாக உலா வரச் செய்திருக்கிறோம்.

தமிழ்ச் சமுதாயம் இந்த நூலை வாங்கிப் போற்றிப் பாராட்டிப் பாதுகாக்கும் என்று மனப்பூர்வமாக நம்பு கிறோம்.

15—1—69

அன்பன்

**தமிழ்ப்பித்தன்**

# எமது வெளியீடுகள்

புதிய வரலாறு

உணர்ச்சி வெள்ளம்

அண்ணாவின் உயில்

தென்பாண்டிச் சிங்கம்

குறளோவியம்

# சுதந்திரத் திருநாள்

இதுவரைக்கும் சுதந்திர நாள் விழாக்களில் அமைச்சர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். அந்த அமைச்சர்கள் 1967 தேர்தலுக்குப் பிறகு பதவி நீங்கிய காரணத்தால் இந்த சுதந்திர விழா அமைச்சர்கள் இல்லாமலேயே நடைபெறுமோ என்ற அச்சம் இந்த விழாவின் மூலம் நீக்கப்பட்டிருக்கிறது.

யார் அமைச்சர்களாக வந்தாலும்—நாட்டின் சுதந்திர நாள் கொண்டாடப்படும்; அந்த விழாவில் அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள் என்பதைக் காட்டத்தான் சுதந்திர நாள் விழாவில் இந்த அமைச்சரவை கலந்து கொள்கிறது. நாங்கள் ஏன் சுதந்திர நாளைக் கொண்டாடுகிறோம் என்ற ஐயப்பாட்டிக்கு நான் தரும் இந்த எளிய விளக்கமாகிலும் புரியும் என்று நம்புகிறேன்.

இப்படியொரு சுதந்திரநாள் விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்பது எனது இருபதாண்டுகால ஆசை. 1947ஆம் ஆண்டே—அன்று நான் இருந்த கட்சித் தலைமைக்கு எதிராகச் சுதந்திர நாள் கொண்டாடப்பட வேண்டியதுதான் என்று எழுதிக் கோபதாபத்திற்கெல்லாம் ஆளாக்கப்பட்டேன். அப்போது சுதந்திர நாள் விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று எண்ணமிருந்தாலும், அப்போது கலந்து கொண்டிருந்தால் சாதாரண அண்ணாத்துரையாகத்தானே கலந்துகொள்ள வேண்டியதிருக்கும். ஆனால் இன்று முதலமைச்சர் என்ற முறையில் கலந்து கொண்டாலும், 20 ஆண்டுக்கால ஆசைக் கனவு நிறைவேறுகிறது என்ற மனநிறைவு எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்தத் திருநாளில் — சுதந்திரப் போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்தோருக்கும்—உயிர்த்தியாகம் செய்யா விட்டாலும் பல தியாகத் தழும்புகளை ஏற்று உயிர் வாழ்ந்து கொண்டு—வதைப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து கொண் டிருக்கும் எண்ணற்ற தியாகிகளுக்கும் நமது மனம் நிறைந்த மரியாதையை — பேரம் பேசாத மரியாதையை — பயன் கருதாத மரியாதையைத் தெரிவிக்கிறேன்.

தென்னை மரத்தின் அடியில் (தாளில்) சாதாரணத் தண்ணீர் ஊற்றினாலும் — அதன் உச்சி சுவைமிக்க இள நீரைத் தருவதுபோல் அந்தத் தியாகிகள் எதையும் எதிர் பாராமல் பணிபுரிந்து—நம்மை யெல்லாம் தலைநிமிர்ந்து நடக்கச் செய்தார்கள். இத்தகைய தியாகிகளுக்கு மரியாதை செய்வதில் தி. மு. கழகம் என்றும் தயக்கம் காட்டியதில்லை; காட்டப் போவதுமில்லை!

நாட்டிலே ஆட்சி ஒரு கட்சியிடமிருந்து இன்னொரு கட்சி யிடம் செல்லலாம். தலைமையிலே மாறுதல் வரலாம். ஆனால் சுதந்திரம் என்றென்றும் நிரந்தரமானது. சுதந்திரத் தைப் போற்றுவது பேச்சினால் மட்டுமல்ல; செயலினாலும் இருக்க வேண்டும்; ஒரு நாளில் ஒரு விழாவில் மட்டுமல்ல! எல்லா நாட்களிலும் போற்றப்படுவது, விரும்பி வரவேற் கப்பட வேண்டியது.

யார் கட்டளையிட்டார்கள் சிதம்பரனாருக்கு — செக் கிழுக்கும் துன்பம் ஏற்கும் காரியத்தைச் செய்யச் சொல்லி? யாரும் கட்டளையிடவில்லை.

திருப்பூர் குமரனுக்கு, "போலீஸார் குண்டாந்தடியால் அடிப்பார்கள்; ரத்தம் குபுகுபு என வரும் போ!"—என்று யார் கட்டளையிட்டார்கள்? யாரும் கட்டளையிடவில்லை!

உள்ளத்தில் ஏற்பட்ட ஓர் உணர்ச்சி—தூய உணர்ச்சி— தூய ஒரு நோக்கத்திற்காக அவ்விதம் செய்யச் சொல்

லிற்று! அந்தத் தூய உணர்ச்சியை—தூய நோக்கத்திற்காக நாமும் பெறுவதற்குத்தான் இந்த விழா!

சுதந்திரம் பெறுவதுகூட எளிது; பெற்ற சுதந்திரத்தைக் காப்பதுதான் பெரிது! அதற்காக நமது நினைப்பை-அறிவை—ஆற்றலை—வீர உறுதியை ஒப்படைக்க வேண்டும்.

சீனம் படையெடுத்த போது அந்த வீர உறுதியை இந்த நாடு காட்டியது. இந்த நாடு நம்முடையது; இந்த நாட்டுச் சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டியது — சுதந்திரத்தின் முழுப் பலன் எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என உறுதி எடுக்கும் விழா இந்த விழா!

1947 ஆகஸ்ட் 15ஆம் நாளில் வந்த முதல் சுதந்திர நாள்—கணக்குத் தீர்த்த நாள்! நமக்கும் நம்மை ஆண்ட வேற்று நாட்டவனுக்கும்—நமக்கும் நம்மை அடிமையாகக் கொண்டவனுக்குமுள்ள கணக்குத் தீர்த்த நாள்.

ஆனால், 1967 ஆகஸ்ட் 15ஆம் நாளில் வந்த இந்த சுதந்திர தின விழா கணக்குப் பார்க்கும் நாள்! பெற்ற சுதந்திரத்தால் பெற்ற பயன் என்ன? — என்பது பற்றிக் கணக்குப் பார்க்கும் நாள் இந்த நாள்!

குழந்தை கருவிலிருந்து வெளியாகிக் கீழே விழுந்ததும் கறுப்பா; சிவப்பா—என்று பார்த்து அகமகிழ்வது முதற் கட்டம்! பிறர் எள்ளி நகையாடாதபடி துள்ளி விளையாடி—மழலை மொழி பேசி—அந்த மழலை குழலையும் விஞ்சக் கூடியது என்ற வள்ளுவர் மொழியை மெய்ப்பித்துக் காட்டுவது அடுத்த கட்டம். இந்தக் கட்டத்தில்தான் நாம் இருக்கிறோம்.

இப்படிப் பெரிய கணக்குப் பார்க்கும் இந்த வேளையில் சில்லறைக் கணக்கைப் பார்க்க என் மனம் ஒப்பவில்லை. அவர்கள் செய்வதைச் சில்லறைக் கணக்கில் மட்டும் சேர்க்க வில்லை. 1967 - பிப்ரவரியிலேயே பைசல் செய்யப்பட்ட

கணக்கு அது! சுதந்திரம் பெற்ஞேம்; 20 ஆண்டுகள் உருண் டோடிவிட்டன.

நாம் அடிமையாயிருந்த காலத்தில் - வெளிநாட்டார், "இந்தியா தங்கச் சுரங்கம் நிறைந்த நாடுதான். மாடு கட்டிப் போரடித்தால் போதாது என்று சொல்லி யானை கட்டிப் போரடித்த வளம்மிக்க நாடுதான். இருந்தாலும் அங்கே வறுமை இருக்கிறது; அறியாமை இருள் இருக்கிறது; இல்லாமை இருக்கிறது; போதாமை இருக்கிறது—காரணம் வெளிநாட்டார் ஆட்சியிருக்கிறது — என்று பிற நாடுகள் எல்லாம் நம்மிடம் பரிவு காட்டின.

ஆனல் சுதந்திரம் பெற்று 20 ஆண்டுக்காலம் ஆன பிறகு நம்மை நாமே ஆளுகிறேம் என்ற நிலே ஏற்பட்ட பிறகு—நான்கு பொதுத் தேர்தல்களை நடத்தி—மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு ஏழ்மையும்-இல்லாமையும்—தீண்டாமையும்—கல்லாமையும் இருக்கிறது என்றால் முன்பு நம்மைப் பார்த்துப் பரிதாபப்பட்ட நாடுகள் எல்லாம் எள்ளி நகையாடத்தானே செய்யும்? ஆங்கிலேயன் தான் உன் வளர்ச்சிக்குத் தடை என்றயே—அவன்போய் 20 வருடங்களாகி விட்டனவே; இன்னும் ஏன் வறுமையும், கல்லாமையும் அகலவில்லே என்று கேட்கமாட்டார்களா?

இதை உணருவோமானல்—அந்த நிலே போக்கப்பட வேண்டும் என்ற உறுதி பிறக்க—ஆண்டுக்கு ஒரு நாளாகிலும்—அனைவரும் கூடிக் கொண்டாட வேண்டிய நாளாக இந்தச் சுதந்திர நாள் இருக்க வேண்டாமா?

ராஜாஜி அவர்களிடம் சிறிது நேரத்திற்கு முன்பு பேசிக் கொண்டிருந்தேன். என்னுடன் முன்னள் காங்கிரஸ் அமைச்சரும் மக்களவைத் தலைவருமான சஞ்சீவி ரெட்டி இருந்தார்.

அவரிடம் ராஜாஜி அவர்கள், ''இந்த சுதந்திர நாளை யாகிலும் ஒரு கட்சிக்குச் சொந்தம் என்று ஆக்கிவிடாமல் நாட்டுக்குச் சொந்தம் என்றாக்கி—நாடே கொண்டாடும் படி இருந்திருக்கலாம்—'' என்று சொன்னார்.

அதற்குச் சஞ்சீவரெட்டி 'இருந்திருக்கலாம்' என்று கூறினார். நான் அந்தக் கேள்விக்கு எதுவுமே கூறவில்லை!

## சுதந்திர நாள் ஒரு கட்சிக்கு மட்டும் உரியதல்ல

சுதந்திர நாள் என்பது கட்சி அடிப்படையில் அல்லாமல் நாடு முழுவதும் கொண்டாடப்பட வேண்டியது. அப்படித்தான் பிற நாடுகளில் கொண்டாடுகிறார்கள். பாரிஸ் நகரில் அந்த நாட்டுச் சுதந்திர நாளை மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறார்கள்! பாடத் தெரிந்தவர்கள் மட்டுமல்ல-அந்த ஒரு நாளில் பாடத் தெரியாதவர்களும் நாட்டைப்பற்றிப் பாடுவார்கள்! எங்கெங்கும் விழாக் கோலம் இருக்கும்! மகிழ்ச்சிக் கொண்டாட்டம் இருக்கும் என்று ஏடுகளில் படித்திருக்கிறேன்.

ஆனால் இங்கு ஒரு கட்சிக்கு மட்டுமே உரியது சுதந்திர நாள் என்று ஆக்கப்பட்டுவிட்டது.

இரண்டாவது உலகப் போரில் அழிக்கப்பட்ட நாடுகளான ஜப்பானும் ஜெர்மனியும்—பெரும் தாக்குதலுக்காளான ரஷ்யாவும் மீண்டும் தங்களை வளர்த்துக் கொண்டு பிறருக்கும் உதவ முன்வருகின்றன. இத்தனையையும் யுத்தம் நடந்து முடிந்த 15 ஆண்டுகளில் செய்து முடித்தார்கள். 15 வருடத்தில் மயானக் குழியிலிருந்து எழுந்து மாடியில் உலவுவது போன்ற உயர்நிலை அடைய முடிந்தது அந்த நாடுகளால்!

ஆனால் 20 ஆண்டுகளாகச் சுதந்திர நாடாக இருந்தோம்; திட்டம் பல போட்டோம்; இன்னும் வறுமையிலும்—இல்லாமை இருளிலும் உழல்கிறோம். இந்த வறுமையைப் போக்குவதும், அறியாமையைப் போக்குவதும் கூடத்தான் சுதந்திரப் போராட்டத்தின் கூறுகளாகும்.

ஏழை மக்கள் உரிமை பெற—தொழிலாளர் உரிமை பெறப் போராடுவது—சுதந்திரப் போராட்டத்தில் ஒரு கூறாகும்!

எல்லோரும் இந்நாட்டு மக்கள், எல்லோரும் ஓர் நிறை; எல்லோரும் இந்நாட்டு மன்னன்—என்ற குறிக்கோளுக்காகப் பாடுபடுவதும்—சுதந்திரப் போராட்டத்தின் குறிக்கோளாகும்.

★

# சமாதானத்துக்கு ஓர் அரங்கு

நைல் நதிக் கரையிலும் இஸ்ரேலை யடுத்துள்ள பாலை நிலத்திலும் போர்மூண்டு கொஞ்ச காலத்துக்குள்ளாகவே நாம் ஐ. நா. தினத்தைக் கொண்டாடுவது விந்தையல்ல. ஆனால் அதில் ஆழ்ந்த கருத்து இருக்கிறது. ஐ. நாவுக்குப் பக்கபலமாக இருந்து அதற்கு உறுதியும் ஆதரவும் தேடுவதில் நாம் உறுதியாகயிருப்பதை இதுகாட்டுகிறது. ஏனென்றால் உன்னத லட்சியமுள்ள ஒரு நிறுவனத்தை அதன் தோல்விகளைக் கொண்டு குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. அந்த நிறுவனத்தின் அடிப்படை உணர்ச்சியைக் கொண்டும் அதன் மூலம் ஏற்படும் நம்பிக்கையைக் கொண்டும்தான் அதை அளவிட வேண்டும், ஐக்கிய அரபுக் குடியரசுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே மோதல் ஏற்படாமல் ஐ. நா. வால் தடுக்க முடியவில்லை என்பதும், வியட்நாம் போரை முடிவுக்குக் கொண்டு வர அதனால் இயலவில்லை என்பதும் உண்மையே! ஐ. நா. செயலற்றுவிட்டது என்று நிரூபிப்பதற்குச் சில சம்பவங்களை எடுத்துக்காட்ட முடியும். அத்தகைய சம்பவங்களைச் சிலர் எக்களிப்போடும் வேறு சிலர் வேதனையோடும் சுட்டிக் காட்டவும் செய்கிறார்கள். ஆனால் எங்கேயாவது மோதலோ வலுத்தாக்குதலோ, துவேஷமோ இருந்தால் உலக மக்களெல்லோரும் ஐ. நா. வையே நினைத்துக் கொள்கிறார்கள் என்பது முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய விஷயமாகும். இது ஓர் அற்புத உண்மை. ஏனென்றால், பல நாடுகளைச் சேர்ந்த மக்களின் இதயத்தில் நம்பிக்கை ஒளியை ஊட்டும் ஸ்தாபனமாக ஐ.நா. விளங்குவதை இதுகாட்டுகிறது. உலக மக்கள் ஐ.நா. ஸ்தாபனத்தைச் சமாதானத்துக்கும் நல்லுணர்வுக்குமான ஒரே கருவியாகவும், போரையும் ஆக்கிரமிப்பையும் முடி-

வுக்குக் கொண்டு வருவதற்கு நம் வசம் உள்ள ஒரே நிறுவன மாகவும் கருதுகிறார்கள். ஐ. நா. வுக்குத் தோல்வி ஏற்படும் போது நம்மில் பலருக்கு உண்டாகும் கோபமும் வேதனை யுமே அந்த நிறுவனத்துக்குக் கொடுக்கப்படும் மிகச் சிறந்த பாராட்டாகும். போரைத் தவிர்த்து அமைதியை நிலை நாட்டுவதற்கும், ஆக்கிரமிப்பை ஒழித்து நீதியை நிலை நிறுத்துவதற்கும், கொடுங்கோலனின் முன்னேற்றத்தை முடிவுக்குக் கொண்டு வரவும் உலகத்துக்கும் ஒரு நிறுவனம் தேவை என்பதே இதன் கருத்து. நாம் விரும்பும் பலன் ஐ.நா. மூலம் கிடைக்காமல் போகும்போது நமக்குக் கோப மும் வேதனையும் உண்டாவதற்கு இந்த உயர் நம்பிக்கை தான் காரணம். உலக அமைதியும் நல்லுணர்வும் மிகமிக அவசியம் என்பதில் நமக்குள்ள நம்பிக்கையை வலுப் படுத்திக் கொள்வதன் மூலம் ஐ. நா. வை வலுவாக்க வேண் டும். இதற்காகவே ஐ. நா. தினம் கொண்டாடுகிறோம். கலைஞன் வாசிக்காவிட்டால் கூட, யாழ் யாழ்தான்; அது போலவே, பட்டை தீட்டாவிட்டாலும் வைரம் வைரம் தான். உன்னதக் குறிக்கோளுடன் இன்று நம் வசம் உள்ள ஒரே நிறுவனம் ஐ. நா. வாகும். அதன் தோல்விகளும் பல வீனங்களும் அந்த நிறுவனத்தின் அவசியத்தையோ, முக்கி யத்தையோ குறைக்கவில்லை; குறைக்கவும் முடியாது. அதே சமயம், சுற்றிலும் விபரீத எண்ணங்களும், அணு ஆயுதங் களும், பேராசைக் கண்களும் ஆக்கிரமிப்பு நோக்கமுங் கொண்ட நாடுகள் வஞ்சகப் பேச்சாலும் மிரட்டலாலும் மற்ற நாடுகளை அடிமைப் படுத்த நினைக்கும் நாடுகள்— நிறைந்திருக்கையில் இந்தநிறுவனம் அமைதிக்காகவே திட்ட மிட்டு அமைதிக்காகவே விண்ணப்பம் விடுக்கிறது என்றால் இந்தக் காட்சி எல்லோருக்கும் பெருமதிப்பைக் கொடுப்பதா கும். படைக்கலங்களும். படை அணிவகுப்புகளும், படைத் தலைவர்களும், ராஜதந்திரிகளும், அணுகுண்டுகளும், ஹைட் ரஜன் குண்டுகளும் நிறைந்த ஓர் உலகத்தில் ஐ. நா. செய லாற்றி வருகிறது. விநோதமான காட்டுமிராண்டி நாடுகளில்

ஞானிகள் அவதிப்படுவது போல் ஐ. நா. அவதிக்கும், அவமானத்திற்கும், அவதூறுக்கும், தூஷணைக்கும் இலக்கா கிறது. ஆயினும், காட்டு மிராண்டியை நாகரிகப்படுத்துவதற்கும் கோபக்காரர்களைச் சாந்தப்படுத்துவதற்கும், பேராசைக்காரர்களை ஒரு கட்டுக்குள் கொண்டு வருவதற்கும், இவர்களுக்கெல்லாம் அமைதியும் நீதியும் நிறைந்த வழியைக் காட்டுவதற்கும் ஐ. நா. விடாமல் முயன்று வருவது குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். தனது முயற்சிகள் அனைத்திலும் ஐ. நா. வெற்றி அடைந்து விடவில்லை.

ஐ. நா. வைக் கேவலமாக நடத்தும் தென்னுப்பிரிக்கா, ரொடீஷியா, போர்ச்சுக்கல் போன்ற நாடுகள் சிலவும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனல் ஐ. நா. பின் வாங்க மறுக்கிறது; மனித மனத்தில் இயல்பாக உள்ள கண்ணியத்தைத் தூண்டுவதற்கு அது நம்பிக்கையோடு முயன்று வருகிறது. அரியதொரு சேவை ஆர்வத்துடன் இந்த நிறுவனம் சென்ற 22 ஆண்டுகளாக உலக சமாதானக் கொடியைத் தூக்கிப் பிடித்து வந்திருக்கிறது.

ஐ. நா. முதன் முதலில் நிறுவப்பட்டபோது நெடிய நோக்கில்லா மக்கள் உலக சமாதானத்துக்கு ஒரு நிறுவனம் ஏற்படுவது என்ற கருத்தையே ஏளனம் செய்திருக்கக்கூடும். பழைய சர்வதேசச் சங்கம் தோன்றி மறைந்த வேதனைமிக்க கதையின் நினைவுகள் அப்போது நிழலாடிக் கொண்டிருந்தன. சர்வதேசச் சங்கம் தோல்வியடைந்திருந்துங்கூட நிதானமும், ஆத்மீக உணர்வும் கொண்டு பெரியோர்கள் இரண்டாவது உலகப் போரால் சீர்குலைந்திருந்த ஓர் உலகத்தில் ஐ. நா. ஸ்தாபனத்தை நிறுவுவதற்குக் கூடினர்கள் என்றால் அது வியப்புத்தரும் விஷயம்தான். உண்மையில் ஐ. நா. பல நாடுகளின் தலைநகரங்களுடைய சிதைவுகளின் மேல் நிறுவப்பட்டதாகக் கூடச் சொல்லலாம். பிணங்களும், நடைப் பிணங்களும், ஊனமுற்றோரும், அங்கஹீனமுற்றோரும், பார்வை இழந்தவர்களும், அனாதைகளும் இத்தகையதொரு சூழ்நிலை

யிலேயே இது உருப்பெற்றது. நீதியின் இறுதி வெற்றி யிலிருந்த அசைக்கமுடியாத நம்பிக்கையைத்தவிர வேறு எதுவும் அவர்களுக்கு இந்தத் திட்டத்தைத் துவக்குவதற்காகத் தைரியத்தையும்,விவேகத்தையும் கொடுத்திருக்க முடியாது. புயலால் கொந்தளிக்கும் கடலிலே அபாயம் நிறைந்த ஒரு பிரயாணத்தை மேற்கொள்வது போலிருந்தது அது. கப்பல் சிதைவதைத் தவிர வேறு வழியேதும் இல்லாதநிலை. ஆம், பொங்கும் அலைகளையும் கடல் நீரின் பலமான போக்கையும், தைரியத்துடன் எதிர்த்து நின்று, உதவி தேவைப்படுவோருக்கு நம்பிக்கையும் ஆறுதலையும் கொடுத்து இந்தக் கப்பல் இருபத்திரண்டு ஆண்டுகளாகக் கடலிலே பிரயாணம் செய்து வருகிறது. இந்த ஸ்தாபனத்திற்குப் பாதகமான அம்சங்களையும், அதைச் சூழ்ந்து இருக்கும் அக்கறையின்மையையும் கருத்தில் கொண்டுதான் இதை மதிப்பிட வேண்டும். இப்படி செய்தால்தான் சரியாக மதிப்பிட முடியும்.

தாக்குவதற்கோ, தாக்குதல்களை எதிர்ப்பதற்கோ எப்போதுமே நாடுகள் ஆயத்தமாக இருக்கக் கூடிய நிலையிலே தூதுவர்களுடன் உளவாளிகளையும் அனுப்பத் தயாராக இருக்கும் நிலையிலே எல்லைகளைத் தகர்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் தலைநகரங்களில் ஆடம்பரமான வரவேற்புக்களுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கும் நிலையிலும், உலகம் இன்று இருக்கிறது. இந்த நிலையிலும் அந்த பிரம்மாண்டமான கட்டிடத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் தேசியக் கொடிகள் பறந்துகொண்டிருக்கின்றன. சம கௌரவத்தோடு பறக்கின்றன. பல்வேறு நாடுகளாக இருப்பினும் ஒரே உலகத்தைச் சேர்ந்தவை, தனித்தனியாக வாழ்கின்ற போதிலும் பொதுவான குறிக்கோளைக் கொண்டவை, பொதுநலனுக்காகத் திரட்டுவதற்கென வளரும் வலிமையும் கொண்டவை. மனிதனை மேலும் மகிழ்ச்சியுள்ள நிறைவாழ்வு வாழச் செய்யும் அச்சத்திலிருந்தும், பஞ்சத்திலிருந்தும், நோயிலிருந்தும், அறியாமையிலிருந்தும், வன்முறையிலிருந்தும், காட்டுமிராண்டித்தனத்திலிருந்தும் விடு

படச் செய்யவும் சுருங்கச் சொன்னல் மனிதனுக்கு உரியது எதுவோ அதைக் கொடுக்க ஒரு மனிதன் என்ற கௌரவத்தைக் கொடுக்கும் பொதுவான—சிறப்பான பணிக்காகப் பல்வேறு நாடுகளின் தனிப்பட்ட ஆற்றலை ஒன்று சேர்க்கும் பொருட்டுப் போரை ஒழித்து அமைதியை நிலைநாட்டி, நட்பையும் தோழமையையும் உருவாக்கி வளர்த்து ஒருவருக்கொருவர் உணர்ந்து மதித்து, நடக்கக்கூடிய வகையில் உலகையே மேலும் சிறப்புறச் செய்யும் புனிதமான பணியில் பங்கு வகிப்பவை என்று உலகுக்குப் பறைசாற்றுகின்றன. மனிதனை மிருகமாக்குவதும், சோலை வளங்களைப் பாலைவனங்களாக்குவதும், நகரங்களைச் சிதைவுகளாக்குவதும், சுபிட்சத்தை வறுமையாக்குவதும் ஆக்கிரமிப்பாளரைத் தவிர வேறு யாராகத்தான் இருக்க முடியும்? இத்தகையதொரு ஆக்கிரமிப்பாளரைக் கண்டுபிடிப்பதுதான் ஐ. நா. வின் நோக்கம். ஏனென்றல், அவன் தனது உருவத்தையும், சொல்லையும் மாற்றக் கூடிய கபடமானவன்; அவனைக் கண்டுபிடித்து, வெளிக் கொணர்ந்து மற்றவர்களின் நல்லெண்ணத்தால் கிடைக்கும் ஆற்றலைச் சேர்ந்து அவனை இந்த முயற்சியிலிருந்து தடுக்கும் பொருட்டு ஐ.நா. விழிப்புடன் இருக்க வேண்டும். இது எளிதான காரியமல்ல. அபாயங்கள் பல நிறைந்த ஒரு வேலை. ஆற்றலும் தியாகமும் தேவைப்படும் ஒரு வேலை இது. தோல்விகளும், கண்டனமும், குற்றச்சாட்டுகளும் இருந்தும்கூட இந்தப் போராட்டத்தை ஏற்று நடத்த வேண்டிய படைவீரர்கள் இருக்கிறர்கள் என்பதை இதன் 22 ஆண்டுக்கால வாழ்க்கை தெளிவாக்குகிறது. நல்லுள்ளங்களுக்கு இது நம்பிக்கை அளித்திருக்கிறது. காலஞ்சென்ற போப் ஜான், உள்ளத்தில் உவகையுடன் கூறியிருக்கிறர். ஐ.நா. ஸ்தாபனத்தின் பணிகளில் பிரம்மாண்டமான அளவுக்கும் அவற்றின் புனிதத் தன்மைக்கும் ஏற்ப இந்த ஸ்தாபனத்தின் அமைப்பும் அது பின்பற்றும் வழிமுறைகளும் வளரவேண்டும் என்பது தான் நமது மனப்பூர்வமான விருப்பம். ஒவ்வொரு மனிதனும் மனிதன் என்ற முறையில் தனக்குள்ள கௌரவத்தி

லிருந்து உருவாகும் உரிமைகளைப் பயனுள்ள விதத்தில் பாது காக்கும் தன்மையை இந்த ஸ்தாபனத்தில் காணக் கூடிய நாள் வரக்கூடும்.''

மனிதன் நன்னெறிகளை மறுக்கிறது. போர், அறிஞர் களும் ராஜதந்திரிகளும், கவிஞர்களும், மதக்குருக்களும், எல்லாவற்றிற்கும் மேலாக வெற்றி நடை போட்டு வரும் படைத் தளபதிகளும் போரைக் கண்டிக்கிறார்கள். போர் கொடியது என்றும், மனித கௌரவத்தை மறுக்கிறது என்றும் அவர்கள் கண்டனம் செய்கிறார்கள். இருப்பினும் போருக்குப் பின் போர் ஏற்பட்டது. ஏனென்றால், போர்க் களத்தைவிடச் சிறந்ததொரு அரங்கு இருக்கவில்லை. தகராறைத் தீர்ப்பதற்கு வேட்டுச் சத்தத்தைவிடச் சிறந்த தொரு வாக்குவாதம் இருக்கவில்லை. தகராறைத் தீர்த்து உரிமையை நிலைநாட்ட வேறு வழிபிறக்கவில்லை.

ஐ.நா. ஸ்தாபனம் இன்றைய அரங்காக விளங்குகிறது. இது முற்றிலும் போதுமானது என்று சொல்ல முடியாது. ஆனால் பேச்சுக்களினாலும் அதன்படி நடந்து செயல் புரிவ தனாலும் போரைத் தவிர்த்துத் தகராறைத் தீர்ப்பதற்கான ஒரே அரங்காக இருக்கிறது. உறுப்பு நாடுகளின் பிரதிநிதி கள் தங்களைப் பிரிக்கும் பிரச்சினைகளை ஆராய்கிறார்கள். உலக மக்கள் முன் தங்கள் நிலையை எடுத்துக் கூறுகிறார்கள். மனிதர்களைக் கொலை செய்வதற்குப் பதிலாகத் தங்கள் நிலைக்காக வாதாடுகிறார்கள்.

உறுப்பு நாடுகள் தங்களுக்கிடையே உண்டான உறவு முறைகளில் பின்பற்ற வேண்டிய நெறியை ஐ. நா. வகுக் கிறது.

தகராறுகளைத் தீர்ப்பதற்காக ஐ. நா. ஸ்தாபனம் சமாதானத் தூதுவர்களை அனுப்புகிறது. உறுப்பு நாடுகள் தகராறுகளைத் தீர்ப்பதற்காக இந்த முறையை ஏற்றுக் கொண்டுள்ளன என்பதே வரலாற்று முக்கியத்துவம்

வாய்ந்ததாகும். ஏனென்றால், போரை ஒழிக்க வேண்டும் என்பதைக் கொள்கையளவிலாவது ஏற்றுக் கொள்ள உறுப்பு நாடுகள் ஆயத்தமாக இருப்பதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது.

மனப்பூர்வமான உணர்வு இல்லாமை, வல்லரசு மண்டலங்களின் செல்வாக்கு, உறுதியின்மை, உறுதி கொள்வதில் காலதாமதம் ஆகியவை இந்த முறையைக் குலைத்துப்போர் மூளச் செய்கின்றன. ஆனால், ஐ.நா. வலுப்படுத்தப்படுமேயானால் உலக மக்கள் அனைவரும் அதன் நன்னெறிகளுக்குப் பக்கபலமாக நிற்பார்களேயானால் அமைதிக்காகப் போராடுமாறு தங்கள் நாடுகளை வற்புறுத்துவார்களேயானால், இதனால் ஏற்படக்கூடிய விபரீத விளைவுகளைப் பெருமளவு குறைக்க முடியும்.

ஐ.நா.வை வலுப்படுத்தி அதற்குப் பக்கபலமாக நிற்குமாறு ஒவ்வொருவருக்கும் வேண்டுகோள் விடுப்பதற்காகவே இன்றைய தினத்தைக் கொண்டாடுகிறோம். மதிப்புக்குரிய டாக்டர் ராதாகிருஷ்ணன் சுட்டிக் காட்டியிருப்பதைப் போல ''புதிதாய் உருவாகிவரும் உலக சமுதாயத்திற்கு ஆத்மாவை, மனச்சாட்சியைக் கொடுக்க முடியும் என்று ஐ.நா. நம்புகிறது.''

ஆனால், ஐ,நா. ஸ்தாபனம் போரைத் தடுத்து அநீதியை ஒழிக்கும் திறமையுள்ள ஸ்தாபனமாக மாறவேண்டுமென்றால், ஒரு தடவை வுட்ரோ வில்சன் குறிப்பிட்டுள்ளது போல அது இமைப்பொழுதும் உறங்காத கண்ணாக இருக்க வேண்டும்; எங்கும் விழிப்புடனும் கவனத்துடனும் இருக்கும் கண்ணாகத் திகழ வேண்டும்.

ஐ.நா. ஸ்தாபனம் வலிமையற்றது. ஆதலால் அதைப் பராமரிக்க வேண்டாம் என்று வாதாடுவது, அந்தக் கண்ணையும் குருடாக்குவதற்கு ஒப்பாகும். பிறகு இருளில் அலைந்து திரிந்து அழிவைத்தான் வரவேற்க வேண்டியிருக்கும்.

ஐ. நா. வின் அவசியத்தைச் சுட்டிக் காட்டுவதற்கு அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஸ்ரீ ஐஸன்ஹோவர் கூறியதைவிட வேறு எதைத்தான் ஆதாரமாகக் காட்ட முடியும்? வெற்றிக் கொடி நாட்டிய வீரரான அவர் கூறுகிறார்; படை பலத்தைப் பயன்படுத்தித் தேசத் தகராறுகளைத் தீர்க்கலாம் என்று ஐ. நா. ஸ்தாபனம் எப்போதாவது ஒப்புக் கொண்டு விட்டால் அப்போது அந்த ஸ்தாபனத்தின் அடிப்படையையும், உலக முறைமை ஒன்றை உருவாக்குவதற்கான நமது சிறந்த நம்பிக்கையையும் அழித்திருப்போம்—அது எல்லோருக்குமே அழிவாகத்தான் இருக்கும்.

ஐ. நா. வின் உடன் பிறந்த குறைகளையும், பிறகு சேர்ந்த குறைகளையும் நன்கு உணர்ந்திருந்த பண்டித ஜவாஹர்லால் நேரு, ஐ. நா. வுக்காக மிகப் பலமாக வாதாடினார். "ஐ. நா. வின் இயல்பை மாற்ற முயன்றால் அமைதிக்காகப் பாடுபடும் மேலும் வலுவான ஒரு அமைப்பை இதனால் உருவாக்க முடியாது. ஏற்கெனவே இருக்கும் சிறந்த ஒரு அமைப்பைக் குலைப்பதாகத்தான் அதற்குப் பொருள். இதற்குப் பதிலாக வேறு எதையும் உருவாக்க முடியாது.

ஆதலால்தான் இந்த ஸ்தாபனத்தை வலுப்படுத்தி உள்ள விவகாரங்களில் அதிகாரம் படைத்த ஒரு அமைப்பாக மாற்ற வேண்டுமே ஒழியப் போர் வெறியர்களின் வெறியாட்டத்தை அழிக்கக் கூடிய நிலையில் உலகை விட்டு விட வேண்டாம் என்று சிந்தனையாளர்கள் அனைவரும் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறார்கள். ஐ. நா. தலைமைக் காரியதரிசி ஊதாண்ட் கூறியிருப்பதைப் போல "எவ்வளவு வலிமை இருப்பினும், எவ்வளவு செல்வம் கொழிப்பினும் எந்த ஒரு நாடும் இன்று தன்னிறைவு பெற்றதாக இருக்க முடியாது."

தனித்து வாழ்வதோ, மற்ற நாடுகளின் சிதைவுகளுக்கு மேல் இருப்பதோ சாத்தியமல்ல என்பதைப் பல நாடுகளும்

இப்போது உணர்ந்துள்ளன. மற்ற நாடுகளுடன்தான் வாழ முடியும்; மனித சகோதர உணர்வு எனும் நன்னெறியை ஏற்று அதன்படி நடந்தால்தான் இது சாத்தியமாகும்.

ஐ. நா. ஸ்தாபனம் பலவீனமாக இருந்துங்கூடப் பல பகுதிகளில் போரைத் தடுத்திருக்கிறது. தகராறுகளைப் பரவ விடாமல் தடுத்திருக்கிறது. அமைதியைத் துரிதமாக நிலை நாட்டியிருக்கிறது. ஆத்திரமடைந்த நாடுகளுக்கு ஆறுதல் சொல்லி அமைதியூட்டுவதற்காகக் காவல் நிலைகளையும், திட்டங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது. இஸ்ரேலுக்கும் லெபனுனுக்கும் இடையேயும்; ஸீரியாவுக்கும் ஜார்டனுக்கும் இடையேயும் ஐ. நா. அனுமதிக் கண்காணிப்பு ஸ்தாபனம் 1949 ஆம் ஆண்டிலிருந்து கண்காணித்து வருகிறது. சைப்ரஸ் வாழ் கிரேக்கர்களுக்கும், சைப்ரஸ் வாழ் துருக்கியர்களுக்கும் இடையே 1964 ஆம் ஆண்டி லிருந்தே 4,000 பேர் கொண்ட அனுமதிப் பராமரிப்புப் படை சமாதானத்தை நிலைநாட்டி வருகிறது, காஷ்மீரில் போர் நிறுத்தத்தோடு நெடுகிலும் ராணுவப் பார்வையாளர் குழு இருக்கிறது.

இவ்வாறாக இந்த ஸ்தாபனம் படிப்படியாகத் தனது மதிப்பை நிரூபித்து வருவதையும், விவேகமுள்ள எல்லா ருடைய விசுவாசத்தை ஈர்த்து வருவதையும் காணலாம். உறுப்பு நாடுகளின் ஆதரவுடன் இயங்கிவரும் ஐ. நா. ஸ்தாபனம் சமாதான லட்சியத்துக்காகத் தனது அளவற்ற திறமைகளையும் ஆதார வசதிகளையும் பயன்படுத்துவதற்கு மனிதன் வகுத்துள்ள மிகச் சிறந்த சர்வ தேச ஒத்துழைப்பு ஸ்தாபனமாகும் என்பதைக் காலம் எடுத்துக் காட்டியிருக் கிறது.

இந்த ஸ்தாபனத்தின் தடுப்புச் சக்தியானது நமது ஆதர வைப் பெற்றுவிட்டிருக்கிறது. சுகாதாரம், கல்வி, மனித உரிமைகள், சுதந்திரம், ஆகியவற்றுக்கான பல்வேறு பிரிவு கள் மூலம் இந்த ஸ்தாபனத்துக்குள்ள குணப்படுத்தும் சக்தியானது நமது அன்புக்குப் பாத்திரமாகி விட்டிருக்கிறது.

போதிய ஆதார வசதிகள் படைத்திராத நாடுகளுக்கு உதவி புரிந்து வழிகாட்டுவதற்காகவும் அவற்றை வளப் படுத்துவதற்காகவும் அண்டை நாடுகளும் சரி, எங்கே இருக்கும் நாடுகளும் சரி, எல்லா வாழ்க்கைத் துறைகளையும் சேர்ந்த நிபுணர் குழுக்களை அனுப்பி வைக்கின்றன. எங்கெங்கே தேவை இருக்கிறதோ அங்கெல்லாம் மனிதனின் துன்பத்தை, அது உடலை வாட்டும் துன்பமாக இருந்தாலும் சரி, மனத்தில் ஏற்படும் இன்னலாக இருந்தாலும் சரி, அதை அகற்றுவதற்கும் குறைப்பதற்கும் ஒழிப்பதற்கும் கைகொடுத்து உதவத் தயாராயிருக்கும். ஏழை மக்களுக்கு இயற்கை அன்னை அதன் செல்வங்களைக் கொடுக்கும்படிச் செய்வதற்கும் கிரகித்துக் கொள்ளக் கூடியவர்களுக்கு வீரத்தைப் புகட்டுவதற்கும், நலிந்த மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதற்கும் எல்லாருக்கும் மனிதாபிமானத்தையும் காண்பிப்பதற்குத் தயாராயிருக்கும் ஐக்கிய நாடுகள் குழுவைக் காணலாம்.

ஐ. நா. ஸ்தாபனத்தின் சமாதானங்காணும் முயற்சி களில் ஆர்வமில்லாதவர்கள் கூட, மேம்பாடு குன்றிய, மேம் பாடடைந்து வரும் நாடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய் வதில் அது புரிந்து வருகிற பணியைப் பாராட்டத்தான் செய்கிறார்கள்.

சில சமயங்களில் ஐ. நா. வின் சாதனைகள் விஷயத்தில் நமக்குப் பூரண திருப்தி ஏற்படாவிட்டால்கூட ஐ. நா. வுக்கு அதன் எல்லா முயற்சிகளிலும் நாம் தொடர்ந்து ஆதர வளித்து வந்திருக்கிறோம். ஏனென்றால் ஜவஹர்லால் நேரு கூறியிருப்பதுபோல, ஐ. நா. ஸ்தாபனம் பலவீனமடைந் திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் நாம் பலவீன மாயிருப்பதுதான், நாடுகள் பலவீனமாயிருப்பதுதான். அவை கொள்கை பலமற்றவையாய் இருப்பதுதான். அவை நேர்மையற்றவையாய் இருப்பதுதான் என்பதை நாம் உணருகிறோம். நமது மன உறுதியும் பலமும் மட்டுமே

மனித குலத்தின் இந்த நம்பிக்கைக்கு, உலக நீதியின் அரணுக்கு உயிர்நாடியாக இருக்க முடியும். இந்நாட்டிலுள்ள நாம் ஐ. நா. வைப் பலப்படுத்த உத்தேசித்திருக்கிறோம். எனவேதான் இந்தக் கொண்டாட்டம். எனவேதான் இந்த வேண்டுகோள். ஐ. நா. வை நன்கு உணர்ந்து கொள்ளும்படி மக்களுக்கு உதவுங்கள். இந்த ஸ்தாபனத்தின் பின்னணி வரலாறு, அமைப்பு ஆகிய விவரங்கள், அனைத்தையும் மக்கள் அறிந்து கொள்ளும்படிச் செய்து விட்டால், சமாதானத்தையும், நீதியையும், இணக்கத்தையும், மகிழ்ச்சியையும், மறக்க முடியாத, ஒருவகை லட்சியத்தையும் பிரச்சாரம் செய்யும் துணிவுடைய, ஆனால் தோல்வியடையாத இந்த ஸ்தாபனத்தையும் அதில் பொதிந்துள்ள கொள்கையையும் எல்லாரும் பின்பற்றி, அதை மனிதகுலத்துக்குக் கான மாபெரும் அன்பளிப்பாக வாழ்த்தி வரவேற்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. தமிழர்களாகிய நமக்கு, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே "யாதும் ஊரே! யாவரும் கேளிர்" என்பது நமது கவிஞர் பாடி இதைத்தான் கற்பித்தார். ஆகையால், நாம் இந்த ஸ்தாபனத்துக்கு உறுதுணையாக நின்று வழிவழியாய் வந்த லட்சியத்தை எய்துவதில், உதவி புரிவோம்.

# தமிழகத்தின் அறிவுக் கோட்டம்

ஆளுநர் அவர்களே! இணைவேந்தர் அவர்களே! துணை வேந்தரவர்களே! பேராசிரியர் பெருமக்களே! இன்று பட்டம்பெற வந்துள்ள இளந்தோழர்களே!

மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப்பேருரை நிகழ்த்தும் வாய்ப்பினைப் பெற்றமைக்குப் பேருவகை கொள்கின்றேன்.

இப்பல்கலைக் கழகம் தொடங்கி ஓராண்டே ஆகிறது. இதுவே முதல் பட்டமளிப்பு விழாப் பேருரையாகும். இந்த வாய்ப்பு நான் பெற்றிடச் செய்த பல்கலைக் கழகப் பெரியோர்கட்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான்மாடக்கூடலில் நிற்கின்றேன்; நானிலம் போற்றிடும் தனிச் சிறப்பினைப் பெற்றுத் தமிழகத்தின் அறிவுக் கோட்டமாய்த் திகழ்ந்தது மதுரையம்பதி என்ற எண்ணம் ஊட்டிடும், எழுச்சி பொங்கிடும் நிலையில் நிற்கின்றேன்.

## தமிழ் வளர்த்த பாண்டியர்களை எண்ணாத இதயம் எதுவுமில்லை!

இங்கு நின்றிடும் எவருக்கும், அன்றொரு நாள் அறிவாளர் அரண் அளிக்க அரசாண்ட பாண்டியப் பெருமன்னர், தமிழ் வளர்த்து, தமிழர்தம் தனிச் சிறப்பினைக் காத்து, புகழ்க்கொடி நாட்டி, தரணி மெச்சக்கோலோச்சி வந்த வரலாற்று நினைவு எழாமலிருக்க இயலாது. நெஞ்சு நெக்குருகும் நினைவலைகள் எழத்தான் செய்யும்.

இன்று, நான் இங்கு நின்று, பட்டச் சிறப்புப் பெற்றிட வந்துள்ளோரையும் பெரும் பேராசிரியர்களையும் கண்டு களித்திடுகின்றேன்; இங்கன்றோ அந்நாளில் பாண்டியப் பேரரசர் சங்கப் புலவருடன் அளவளாவி, அறிவுப் புனலாடி, அகமகிழ்ந்திருந்தனர் என்பதனை எண்ணுகின்றேன்—இன்பத் தேன்சுவை நுகர்கின்றேன்.

மனக் கண்ணால் காணுகின்றேன். முதுபெரும் புலவர்கள் அவைநோக்கி, முந்நூறு கல் தொலைவினின்றும், மூதறிஞர், காணீர் தமிழ் நெறியை—தாரணியோர் மெச்சி ஏற்றிடத் தக்கதோர் நன்னெறியை—ஈரடியில் யான் இயற்றியுள்ள சீரணியை என்றுரைத்த வண்ணம், திருவள்ளுவனார் வந்திடும் காட்சியினை,

தத்தமது ஏடுகளை, வித்தகர் போற்றிடத் தக்கவென விளக்கி, புலவர் பெருமக்கள் பேருரையாற்றிய பெருமிதமிகு காட்சியெலாம் காணுகின்றேன்; காணாதார் எவருமிரார்.

எத்தகைய அறிவாற்றல். என்னென்ன திறனாய்வு, இங்கிருந்தன அற்றைய நாளில்!

இந்தக் கவிதை எம்மான் இயற்றியது என்றியம்பிய சொற்கேட்டும், 'நெற்றிக்கண் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்றுரைத்த அரிமாப்பெரும் புலவர் நக்கீரர் தெரிகின்றார்; நந்தமிழர் கொண்டிருந்த மாண்பு தெரிகின்றது.

அச்சம் தவிர்த்திடுக! நவநிதியந் தந்திடினும் நந்திக் கிடந்திட இசையாதீர்! வாய்மைதனைக் காத்திடும் வன்மை தனைப் பெற்றிடுக! அதற்காக நெருப்பாற்றில் நீந்திடவும் துணிந்திடுக! யாந்தமிழர் என்பதனை மெய்ப்பித்திடுக! என்றன்றோ அந்நாள் நிகழ்ச்சி நமக்கெல்லாம் அணையிடக் காண்கின்றோம்.

## மொழியின் பெயராய் ஓநாய் வேதாந்தமா?

இந்தத் திருநாட்டில் பிறந்திட்ட நாமெல்லாம் ஆன்றோர் அமைத்தளித்த அரு மரபுதனைக் காத்தல் நீங்காத நற்கடமை என்பதனை உணர்கின்றோம். ஏறுநடை போட்டிடுக! ஏற்றமிகு நிலையதனை இந்நாடு பெற்றிடவே உம தூற்றல் பயன்படட்டும் என்றெல்லாம் புலவர் பெருமக்கள் கூறிநிற்கின்றார்கள்; காண இயலவில்லை. கேட்கின்றோம் அவ்வுரையை.

பாண்டிய நாடிதற்குப் பாங்களித்த மாமதுரை, தமிழ் மரபு காத்திட்ட மன்றம் கண்ட மதுரை, தேமதுரத் தமிழோசை திக்கெல்லாம் எழச் செய்த திருமதுரை, வீரப் போராற்றலாம் மட்டுமின்றி அறிவுக்கணை தொடுத்த மாண்பினாலும், பெருமைதனைப் பெற்ற வெற்றிக் கோட்டம், "அந்த நாளும் வந்திடாதோ!" என்ற உணர்ச்சியால் எவரும் உந்தப்படும் நிலைபெறுவர், மாமதுரைப் பதியின் வரலாற்றுச் சிறப்பறியின்!

ஆம்! ஆயின் ஏக்கம் நமக்கெதற்கு? அந்நாட் சிறப்பினை இந்நாளும் கண்டிடலாம். இவரெல்லாம் அதற்கே ஒப் படைத்துள்ளார்கள். இவர் ஆற்றல் துணைகொண்டு, தமிழ் மரபும் தமிழ் மாண்பும் என்றும் ஒளிமயமாய்த் திகழ்ந்திடச் செய்திடலாம் என்றோர் உறுதியினைப் பெறுகின்றேன்; பெறுகின்றேன்; பெற்றிடச் செய்கின்றீர்; பெரும் புலவர்களாம் நீவிர்! பட்டமளிப்பு விழாவினிலே பாங்குடனே வந்துள்ள அறிவரசராம் நீவிர்; உமக்கென்ன உரைத்திட உளது? உம் உள்ளம் அஃதறியும். உமது பெரும் பேராசிரியர் கருத்து அளித்துள்ளார்; என் கடன் நீரறிந்ததனை மீண்டும் நினைவு படுத்துவதேயாகும்.

## மயில் ஆடுவது பிறர் கண்டு மகிழ! பட்டம் பெறுவது தொண்டு புரிய!

பட்டம் பெற்றிடுகின்றீர்! பல்கலையில் வல்லுநர் ஆகின்றீர்! பல்கலைக் கழகம் ஈன்றெடுத்த நன்மணிகளாகின்றீர்கள்;

ஆம், ஆயின், இஃது முடிவா, தொடக்கமா? அஃதே கேள்வி. பட்டம் பெற்றுள்ளீர்! பாராட்டுக்குரியீர், ஐயமில்லை! ஆயின் பட்டம் எதற்கு? காட்டிக் களித்திடவா? அன்றிப் பணிசெய்திடக் கிடைத்திட்ட ஆணையெனக் கொண்டிடவா? நுமக்கா? நாட்டுக்கா? பொருள் ஈட்டிடவா? நாட்டுப் பெருமையினைக் காத்திடவா! எதற்கு இப்பட்டம் பயன்பட இருக்கிறது? அஃதே கேள்வி! விழாத்தந்திடும் மகிழ்ச்சியுடன் இழைந்து நம் செவி வீழ்ந்திடும் கேள்வி!

தான் உண்ட நீரதனை, பன்மடங்கு பெருக்கி, பார் மகிழத் தருவதற்கே, சூல் கொண்டுலவுவது மேகம். அறிகின்றோம்.

தன் தோகைதனை விரித்துக் கலாப மயில் ஆடுவது தானே கண்டு களித்திடவா? பிறர் காண; பிறர் மகிழ!

தான் காத்து வைத்துள்ள பொற்குவியல்தனைக் கொண்டு, தானேயா அணிகலனைச் செய்து நிலமாது பூட்டிக் கொள்கின்றாள்?—இல்லை—மற்றையோர் பெற்றிடத் தருகின்றாள்.

ஒளிதனை உமிழ்ந்திடும் திருவிளக்கு எதற்காக? இருளில் உள்ளோர் இடர் நீக்க!

பட்டம் பெற்றிடும் சிறப்புடையீர்! நீவீர், திருவிளக்கு—பொற்குவியல் - புள்ளிக் கலாபமயில்-கார்மேகம்-நாட்டைச் செழிக்கச் செய்திடும் வல்லுநர்கள். இசைபாட மக்கள் உம தாற்றலை ஈந்திட வந்துள்ளீர். இதற்கான அனுமதிச் சீட்டே இந்தப் பட்டங்கள். இத்தகையோரைப் பயிற்றுவித்து அனுப்பிக் கொடுப்பதுவே பல்கலைக் கழகத்தின் தனிச்சிறப்பு; நாட்டின் பொதுவுடைமை நீவீர்! இன்று நமக்கென்று பெற்றுள்ள நற்பட்டங்கள் மறந்திடுவோர் அல்லர் நீவிர். எனினும் எடுத்துரைக்க வந்துள்ளேன்—இயம்புகின்றேன்.

எந்நாடாயினும், இடரிலும், இழிவிலும் படாமல் இருளகன்று ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில் அந்நாட்டினில் தொடர்தொடராய், அறிவாளர் தோன்றிய வண்ணம் இருந்திட வேண்டும்; நன்று இது, தீது இது. நமது இது. பிறர் தந்ததிது. மரபு இது, மருள் இது என்பதனை ஆய்ந்தறிந்து கூறுவதற்கும் அவ்வழி நடந்து மக்கள் மாண்பினைப் பெற்றிடச் செய்வதற்கும் ஆற்றல் மிக்க அறிவுப் படை எழுந்தபடி இருக்க வேண்டும்! அதற்கான பயிற்சிக் கூடம் வேறெதுவாய் இருந்திட முடியும்? இஃதே அப் பயிற்சிக் கூடம், பல்கலைக் கழகம், நாடு பல்வளமும் பெற்றிடும் நற்கலையைக் கற்றிட அமைந்துள்ள நக்கீரக்கோட்டம்.

1964-66-ஆம் ஆண்டுத் தேசியக் கல்விக் குழுவினர் இதனை வலியுறுத்திக் கூறியுள்ளனர். எவருக்கும் கட்டுப்படாமல், இழுப்பார் பக்கம் சாய்ந்து விடாமல் சிந்தித்து உண்மை அறிந்து, அறிந்ததனை விளக்கமுடன் எடுத்துரைத்து ஆளடிமையாகாமல், அச்சமற்று நிற்போரை அளிப்பதற்கே பல்கலைக் கழகம் என்ற கருத்துப்பட அக்குழுவினர் கூறியுள்ளனர்.

ஆய்தறிதல் வேண்டும்; அதற்கேற்ற அஞ்சாமை வேண்டும்; இன்றேல், சிந்தனையைச் சிறையிலிட்டுக் கொடுமையைக் கோலோச்சச் செய்வதற்கு உடந்தையானோர் ஆகிவிடுவோம்—என்றுரைக்கிறார்—எச்சரித்திருக்கிறார் பெர்ட்ராண்டு ரசல் எனும் பெருமகனார்.

## தமிழ்ச் சான்றோரின் நல்லுரைகளைத் தரணி அறிந்திடச் செய்வோம்!

ஈராயிரம் ஆண்டுகட்கும் முன்னர் இங்கு அமர்ந்திருந்த புலவோர்கள் கூறிச் சென்றார்கள். இவை போன்ற ஏற்றமிகு நல்லுரைகள் பற்பலவற்றை! இடையில் அவை மறந்தோம், அல்லலுற்றோம். இன்று அவனியின் பிற பகுதிகளிலுள்ள ஆன்றோர் அதனை அறிவிக்கின்றார்; நமக்குண்டு அந்தக்

கருவூலம் நெடுங்காலமாக என்பதனை உணர்கின்றோம்; நாம் தமிழர் என்பதனை அறிகின்றோம்; நானிலம் இதனை அறியச் செய்திடும் தொண்டு புரிந்திட உறுதி கொள்கின்றோம்.

பட்டம் பெற்றிடும் இத்திருநாள் உவகை பெற்றிடும் விழா நாள்: ஐயமென்ன? ஆயினும் உவகை பெற்றிட மட்டுமே அமைந்ததன்று; உறுதி கொண்டிடவும் உள்ளதோர் நன்னாள். நாட்டைக் காத்திடும் நல்ல பணிக்கு நம்மை நாமே ஒப்படைத்திருக்கின்றோம் என்பதனை உணரும் நாளே இந் நாள்.

மதுரைப் பல்கலைக் கழகம் ஓராண்டுப் பருவத்தில் உள்ளது.

நூற்றாண்டு விழா நடத்தி முடித்திட்ட பல்கலைக் கழகங்கள் உள்ளன—நம்நாட்டில்.

பத்தோடு பதினொன்று என்ற முறையிலே அமைந்த தன்று, மதுரைப் பல்கலைக் கழகம்.

தமிழரின் தனித்தேவை ஒன்றினைக் கருத்திற் கொண்டு துவக்கப்பட்டதாகும் மதுரைப் பல்கலைக் கழகம்.

நூறு ஆண்டுகட்கு முன்னர் பல்கலைக் கழகங்கள் துவக்கப்பட்டபோது, நாடு தன்னரசு இழந்து தலை கவிழ்ந்து இருந்தது. மக்கள் மனம் வெதும்பிக் கிடந்தனர்.

பல்வேறு துறைகளிலே சீர்குலைவு; எங்கும் அறியாமை மட்டுமென்று. இந்நாட்டினர் ஏதும் அறிந்திட வல்லார்; அல்லர் என்ற எண்ணம் கப்பிக் கொண்டிருந்த நிலை; இங்கு எவரும் இதற்கு முன்னர் நினைத்துப் பார்த்திருக்க முடியாத அறிவுக் கலைகளை மேனாட்டார் வகுத்தளிக்கின்றார் என்ற உணர்வு மேலோங்கிய நிலையுடன் பல்கலைக் கழகம் நுழைந் தனர்.

அன்றைய நாட்களில் பயிற்சி தந்திட முனைந்தோரும் பரிதாப உணர்வுடனே பாடம் கற்பிக்க முற்பட்டனர். பிறநாட்டில் என்னென்ன கண்டனர் என்ற வியப்பு உணர்ச்சிக்கே முதலிடம்; நம் நாடு ஏதேது அறிந்திருந்தது என்பது பற்றிய கேள்விக்கு ஒதுக்கிடம்!

இந்நிலையில் வளர்ந்தன, பழம்பெரும் பல்கலைக் கழகங்கள்—ஆண்டான் அடிமைகட்கு அன்பு காரணமாக, அறிவு வழங்கிடவும், வேலைக்கு ஏற்ற ஆட்கள் பெற்றிடவும் அமைத்திட்ட இடங்கள் என்று அவை கருதப்பட்டன.

அவற்றினிலே பயிற்சி பெற்று, பட்டம் பெற்ற அறிவாளரில் மிகப் பலரும், நடையாலும், உடையாலும், நாட்டத்தாலும், பிறந்த நாட்டில் வாழுகின்ற வேற்று நாட்டு வடிவங்களாகத் தம்மை ஆக்கிக்கொண்டனர். அதிலே பெருமகிழ்வும் கண்டனர். நெடுங்காலம் இந்நிலை! இன்று அஃது பழங்கதை!!

மதுரைப்பல்கலைக் கழகம், அடிமைத்தளை அறுத்து, ஆளுதற்கு உரிமையும் தகுதியும் பெற்றோம் நாம் என்ற முழக்கமிட்டு விழித்தெழுந்து மக்கள் உலா வந்திடும் நாட்களிலே அமைந்துள்ளது.

'ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! வா!' என்ற பாரதியின் வீர அழைப்புக் கேட்டு, அணி அணியாய் வீரர்கள் திரண்டு வந்தனர்; பிறகு எழுந்தது இந்தப் பல்கலைக் கழகம்.

நாட்டுக்கு விடுதலை கிடைத்திட்டதுமின்றி, மனத்தளைகள் மெல்ல மெல்ல அறுபட்டிடும் நிலையையும் நாம் கண்டோம்; அந்தச் சூழ்நிலையிலே இப்பல்கலைக் கழகம் கண்டோம். சிந்தனை நமது உரிமை என்ற குறிக்கோளுக்கான கோட்டம் இஃது என்பதனை உணர்கின்றோம்.

# மாசு படிந்த மணிபோல நம் எண்ணக் குவியல் இருக்கிறது

எல்லாம் பிற நாடுகளிலே உள; நம் நாட்டிலே ஏதும் இல்லை என்ற பிச்சை மனப்பான்மை செத்தொழிந்து எமக்கு ஈந்திடும் என்று எந்நாட்டவரும் கேட்டுப் பெற்றிடத்தக்க ஏற்புடைய எண்ணக் குவியல் எம்மிடம் உண்டு; அது மாசு படிந்த மணிபோல மங்கியதோர் ஓவியம்போல உளது; மாசு துடைத்திடுவோம்; மணி ஒளியைக் காட்டிடுவோம் என்ற எழுச்சியுடன் கூறத்தக்க விழிப்புணர்ச்சி மேலோங்கி உள்ள காலம் இது; அதனைச் செவிலித் தாயாகப் பெற்றுள்ளது இம்மதலை-மதுரைப்பல்கலைக் கழகம்.

எனவே, இதற்கென்று ஒரு தனித்தன்மை, இதற்காக ஒரு தனிப்பாதை இருத்தல் வேண்டும். இந்தப் பல்கலைக் கழகம், தமிழகத்துக்குக் கருவூலந்தன்னை உலகு காணுதற்கான வழிவகுக்கும் கோட்டமாகி, புலிப்பொறித்தான், கயல் பொறித்தான், ஆரியப்படை கடந்தான்—கங்கை கொண்டான், கடாரம் வென்றான் என்றெல்லாம் புல்லரிக்கும் வரலாற்றினைப் படிக்கின்றோமே, அதற்கு ஒப்ப, குறளளித்தார், மேகலை ஒளி தந்தார், அகமும் புறமும் அறிவித்நார் என்று அவனியிலுள்ள நாடுகளில் வித்தகர் மெச்சிடத்தக்க, புது வரலாறு சமைத்திடுதல் வேண்டும்; அதற்கேற்ற அணி வகுப்பைத் திரட்டுதல் இந்தப் பல்கலைக் கழகத்தின் தனித் திறனாய் அமைந்திடுதல் வேண்டும். பாடமுறை, பயிற்சி முறை, தேர்வுமுறை எல்லாமே, இந்தத் தனி நோக்கம் கொண்டிடுதல் மிக நன்று.

உரியவர்கள் இது பற்றி ஆய்ந்தறிதல்வேண்டும். விருப்பம் உரைக்கின்றேன், வடிவம் கொடுத்திடும் பொறுப்பில் உள்ளோர் செய்திடுவர் எனும் ஆர்வம் கொண்டு.

அச்சம் தவிர்த்தல், ஆய்ந்தறிதல், நாட்டுநிலை உயர்த்தல், பிறநாடுகட்கு நம் தனிச்செல்வம் ஈது எனக் காட்டிடல்,

அளித்திடல், இவை எமது பணி என்று கூறிடுவீர். இந்த நிலை பெற்றோம் என்பதனை அறிவிக்கும் சான்றுகளே, யாம் பெற்றுள்ள பட்டங்கள் என்பதனைச் சொல்லாலும் செயலாலும் காட்டிட வாரீர் எனக் கனிவுடன் அழைக்கின்றேன்.

இவை ஏட்டில் படித்திட இனிப்பவை; விளக்கிப் பேசிட ஏற்றவை; வியந்து கூறிடத் தக்கவை. ஆனால், நடைமுறைக்குக் கொண்டு வருதல் எளிதன்று. தொடர்ந்து கடைப்பிடித்தல் அரிது.

அதற்குத் தளராத உறுதியும், மங்காத ஊக்கமும், ஓயாத உழைப்பும், சீரான நோக்கமும், தன்னல மறுப்பும், மிக மிகத் தேவை. பல்கலைக் கழகம் இந்தப் பண்பினைத் தந்திடும்; தந்துள்ளது என்று எண்ணுகிறேன். ஆம்! உமது சீரிய பணியின் மூலம் மெய்ப்பிக்க வேண்டுகின்றேன்.

தேவையற்றவை, தீது தருபவை, பொருளற்றவை, பொருத்தமற்றவை, இவையெல்லாம் பழமையின், பெயர் கொண்டோ நமது உடைமை என்ற பாசம் காட்டியோ நெளிந்திடக் கண்டபின், விட்டு வைத்திடாமல் அவற்றினை நீக்கிடும் அறப்போரினைத் தொடுத்திடுதல் வேண்டும்.

## பிறநாட்டுத் தேனென்றால் சுவைக்காமலா இருக்கும்?

அவர் கூறியுள்ளார். ஆகவே அஃது அறிவுடையதாகவே இருந்திடுதல் வேண்டும்—என்று எண்ணி இருந்திடாமல், அவர் உரைத்தது இஃது என்பதற்கு முதலிடம் தராமல், உரைத்துளது யாது என்பதற்கே முதலிடம் தந்து உண்மையெனில், உயிர் கொடுத்தேனும் காத்திடுவோம். அன்று எனில் உயிர் போவதெனினும் எதிர்த்து நீக்கி அறிவுத் துறைப் புரட்சியிலே ஈடுபட வருமாறு பட்டம் பெற்றுள்ள நல்லோரை அழைக்கின்றேன்.

இந்நாட்டுத்தேன், எனின் கொட்டிடின் குளிர்ச்சியா காண்போம்? பிறநாட்டுத் தேன், எனின் பருகிடிற் கசப்போ இருந்திடும்?

எங்கிருந்து கிடைத்திடினும் ஏற்புடையதெனின், எம தாக்கிக் கொள்வோம் என்ற நோக்கம் தேவை; அதனைத் தந்திடவும் அதன்மூலம் பயன் கண்டிடவும் இணைந்து பணி யாற்றிட வேண்டும்.

## கத்துகடல் மூழ்கி முத்தெடுத்தோர் தந்தையின் கழுத்திலா கட்டுவர்?

பல்கலைக் கழகங்கள் வளர்ந்துள்ளன, வளருகின்றன. கல்விக்கூடங்கள் பெருகி வருகின்றன. எனினும் இன்றும் மக்கள் தொகையுடன், பட்டம் பெற்றோர் தொகையினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எத்தனை சிறிய அளவினது நமது முன்றேற்றம் என்பதனை உணரலாம்.

எனவேதான் நாட்டு நிலை உயர்ந்திட, நல்லோர் மிகப் பலருக்கு கிடைத்திடா வாய்ப்பை பெற்றுள்ள உம்மிடம் மக்கள் நிரம்ப எதிர்ப்பார்க்கின்றனர். நீவீர் இந்நாட்டை சூழ்ந்துள்ள இல்லாமை, போதாமை, அறியாமை, கயமை என்னும் பகையினை வீழ்த்திடப் புறப்படும் முன்னணிப் படையினர்.

பட்டந்தனைக் காட்டிப் பாங்கான வாழ்வு பெற முந்திக் கொள்ளும் நிலையினர் என்ற நிந்தனையை நீக்கிடுக! நீள் வெற்றி பெற்றிடுக! என வாழ்த்துகின்றேன்.

பட்டம் பெற்றிடுவோர் குறிக்கோளற்றுக் கிடந்திடின் நாடு குலையும்; எதிர்காலம் எழில் உள்ளதாக அமையாது. குறிக்கோளற்ற நிலையே மனக்குழப்பம், கொதிப்பு, அதிர்ச்சி, ஆர்ப்பரிப்பு, ஒழுங்கற்ற செயல்கள், ஊறு விளைவிக்கும்

போக்கு, கலகம் விளைவித்தல், கட்டுக்கு உட்பட மறுத்தல் ஆகியவை எழ காரணமாகிறது என்று கருதுகிறேன்.

நம் நாட்டு இளைஞர்களிடம் குறிப்பாக மாணவரிடம் கேடு நிறைந்த இயல்புகள் மிகுந்து விட்டிருப்பதாகப் பலர் கவலை தெரிவித்துள்ளார்கள். நான், நம் நாட்டு இளைஞர்களிடம் குறிப்பாக மாணவரிடம் நம்பிக்கை இழந்துவிடவில்லை; மாறாக அவர்களின் இயல்பிலே அடிப்படையான கோளாறு எதுவும் இல்லை. அவர் முன் குறிக்கோள் சீரிய முறையிலே காட்டப்படாததாலும் அறிவுரை வழங்கிடும் அன்பர்களில் பலரும் தன்னலப் பிடியினிற் சிக்கித் தகாதன செய்கின்றனர் என்பதைக் காண நேரிடுவதாலும் அவர்கள் இயல்பு திரிந்து விடுகிறது—நேர்வழி அடைபடுகிறது—கேடு தரும் முறைகள் இனிப்பளிக்கின்றன—என்று கருதுகிறேன்.

எனவே இளைஞரும் மாணவரும் நல்லியல்புடன் இருந்திட வேண்டுமெனில், மற்றையோர், நமது சொல்லும் செயலும் பொது நலனுக்கு உகந்ததாக அமைந்திடுமென்று பார்த்துக் கொள்வது இன்றைய அவசரத்தேவை என்பதைக் கூறிட விழைகின்றேன்.

அதேபோது மாணவர்கள் தமக்கு அளிக்கப்பட்டுள்ள வாய்ப்பு எத்தனை அருமை மிக்கது என்பதனை உணர்ந்து அதற்கேற்பத் தமது செயலினை வகுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தந்தையின் கழுத்திலே பூட்டிடவோ, கத்தும் கடல் மூழ்கி முத்தெடுப்பார். தனக்கென வந்துள்ள தையலன்றோ அதற்கு உரியாள்!

அரைத்தெடுத்துப் பூசி மகிழ்தற்கன்றோ சந்தனம்!—அடுப்பு எரிப்பதற்கோ? பட்டம் பெறுவதும் பயிற்சி பெறுவதும் நாட்டினருக்கு நல்வாழ்வு தந்திட! 'எனக்கென்ன

தருகின்றனர்—ஏன் இந்தத் தாமதம் என்ற கணை தொடுக்க மட்டுந்தானு?—எவரும் அதுபோல் கூறுர்.

உம்மிடம் மிகுதியான நம்பிக்கை கொண்டுள்ளோரில் நானும் ஒருவன். புதியதோர் உலகு செய்வோம் — என்று பாடிச் சென்ற பாவலர்—உம் போன்ருேரை மனதுட் கொண்டே பாடினுர். உம்மிடமின்றி வேறு எவரிடம் தூய தொண்டாற்றும் திறனை எதிர்பார்க்க முடியும்?

## மாணவர்களுக்குக் குறிக்கோள் தெளிவாக அமையவேண்டும்!

குறிக்கோள் தெளிவாக அமைந்திடின் மாணவர்களிடம் மாண்புமிகு செயலினை எதிர்பார்க்க முடியும் என்றுரைத்தேன். இந்தக் குறிக்கோளை மாணவர் பெற்றிடத்தக்க விதத்தில் பாடத் திட்டமும் — பயிற்சி முறையும் — பழகு முறையும் — கல்விக் கூடங்களில் அமைந்திட வேண்டும்.

கல்விக் கூடங்களின் எண்ணிக்கை பெருகி அரசுகளின் வருவாய்த்துறை அதற்கேற்ப அமையாதிருக்கும் நிலையில் கல்விக்கூடங்கள் எவ்விதமான சூழ்நிலையில் இயங்க வேண்டுமோ அவ்விதம் இருந்திடச் செய்வதும் இயலாததாக உள்ளது.

படிப்படியாக இந்நிலையிலே செம்மைப்படுத்த அரசு முனைந்து பணியாற்றி வருகின்றது. ஆண்டு பல ஆகக்கூடும், அடிப்படைத் தேவைகளையேனும் அளித்திட முடிவதற்கு!

அதற்கே பொருள் ஈந்திட வேண்டியுள்ளது. அதுவும் எந்நிலையில் இப்பொருளைப் பெறுகின்ருேம் — தருகின்ருேம் என்பதனை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

முழுவயிறு காணுதோர், முதுகெலும்பு முறியப் பாடு படுவோர், வாழ்வின் சுவை காணுர், வலியோரின் பகடைக்

தாய்கள், ஓடப்பர்—ஆகிய இவரெல்லாம் தருகின்ற வரிப் பணமே, கோட்டையாய், கொடிமரமாய், பாதையாய், பகட்டுகளாய், அமுல் நடத்தும் அதிகாரிகளாய், அறிவுபெற அமையும் கூடங்களாகத் திகழ்கின்றன.

வியர்வை பணமாகிறது—வரியாகப் பெறப்படுகிறது; அதனைக்கொண்டே பல்கலைக் கழகம் முதல் தொடக்கப் பள்ளிவரை கட்டப்பட்டுள்ளன.

எத்தகைய தியாகக் கோட்டமாக இந்நாடு இந்நாளி லுள்ளது என்பதனை, எத்துணை ஏழைமைக்கிடையில் இந் நாட்டு மக்கள் தாம் பெற்றிராத பெரிய வாய்ப்பினை நமக்கு அளிக்கின்றனர் என்பதனை மாணவர் உணர்ந்திடின்—அவர் உணர்வர். அவர்களுடைய பொறுப்புணர்ச்சி மிகுந்திடும். ஏற்புடைய செயலில் ஈடுபடுவதே இத்தனை தந்திடும் ஏழையர்க்கு நாம் காட்டும் நன்றியறிதல் என்றறிவர்.

அது மாணவர் உலகில் புதியதோர் திருப்பத்தைத் தந்திடும்.

கனவு காண்கின்றேனா? இல்லை! மாணவர் நினைப்பு அறிந்து கூறுகின்றேன். எதிர்காலம் அவர்களுடையது. அதனை இருளகற்றதாக்கிவிடுவது அவர்கள் பொறுப்பு. அதற்கான ஆற்றல் மிக்கோர் அவர்கள். இஃது எனது நம்பிக்கை.

ஒவ்வொரு நாட்டிலும், சிறப்பு மிக்க கட்டங்களில் மாணவர்கள் முன்னணியில் நின்று பணி புரிந்தனர் என் பதனை வரலாறு காட்டுகின்றது.

இன்று மாணவர்களாக நீவிர் இருந்திடும் காலம் நமது நாட்டின் புதிய வரலாறு எழுதப்படும் காலமாகும்.

கடினமாக உழைத்தால் மட்டுமே வெற்றி தரக்கூடிய லட்சியங்கள் நம்முன் நிற்கின்றன.

ஆனால், அதே வரிசையில் வசீகரப்பூச்சுகளுடன், மயக்கமூட்டத் தக்க பேச்சுகளையும் குறிக்கோள் என்ற பெயரால் நிற்கவிடுகின்றனர். தெளிந்து அறிதல் வேண்டும்.

நாட்டிலே ஒற்றுமை வேண்டும்—இது குறிக்கோள்—அனைவரும் ஏற்கத் தக்கது; இதன் வெற்றிக்காக அரும்பணி யாற்றுவது மாணவர் கடன்.

''நாட்டின் ஒற்றுமைக்காக—உன்மொழி, உன் மரபு அழிந்திடவும் ஒருப்படவேண்டும்; பிற மொழியின் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ளவேண்டும்;''—இஃது அறிவுள்ள எவரும் ஏற்க முடியாதது. தன்மானமுள்ள எவரும் எதிர்த்தாக வேண்டியது.

இதனை இலட்சியம் என்றோ திட்டம் என்றோ கூறுவது, லட்சியம் என்பதற்குக் களங்கம் தேடுவதாக முடியும்.

நாட்டுப் பொதுச்செல்வம் நாளும் வளரவேண்டும். அதற்கான முறையில் அனைவரும் உழைத்திட வேண்டும்—இஃது எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்க லட்சியம்.

## ஆடுகின்ற ஓநாய் கூறுவதுபோல நாம் நடந்திடக் கூடாது

நாட்டுச் செல்வம் பெருகட்டும்; அது நாலாறு பேர்களிடம் சென்று சிக்கிக்கிடப்பினும் கவலைவேண்டாம் என்றுரைப்பது, லட்சியமாகாது—அதனைக் கேலிக்கூத்தாக்குவதாகும்.

கூடி வாழ்ந்தால் கோடி இன்பம்—
இனிய எளிய லட்சியம்.

கூடி வாழ்வோம்; உன்னிடமுள்ளது
எனக்கு, என்னிடமுள்ளது எனக்கு என்ற
முறை வகுத்திடல் கூடிவாழ்வதாகாது.

ஆட்டுக்குட்டியைத் தின்றுவிட்ட ஓநாய் ''என்னோடு ஒன்றாக ஆடு இணைந்துவிட்டது. நாங்கள் இணைபிரியாச் சோதரர் ஆகிவிட்டோம்!'' என்று கூறுவது போன்ற முறையில் ''ஒற்றுமை'' வேண்டுவோர் நடந்திடக்கூடாது என்பதனை அறிவுறுத்த வேண்டும்.

பட்டம் பெற்றோரே! உமது தெளிவுரை கிடைத்து மக்கள் இதுபோன்ற விளக்கம் பெற்றிட வேண்டும் என விழைகின்றேன்.

அறியாமை, வறுமை, ஆகியவற்றினை ஓட்டிடும் ஆற்றல் படை திரட்டிடப் பல்கலைக் கழகம் ஏற்ற இடம் என்பதால் இவற்றினை விரித்துரைத்தேன்.

பயிற்று மொழி, பாடமொழி, ஆட்சி மொழி, இணைப்பு மொழி என்ற சொற்றொடர்கள் வேகமாக உலாவிடக் காண்கின்றோம்.

''தாய்மொழி'' என்னும் தகுதிக்கு ஈடாகவேனும் எந்தத் தகுதியையும் ஒருமொழி பெற்றிடத் தேவையில்லை.

ஆயினும் நமது தமிழ்மொழி, நமது தாய்மொழி என்பதால் மட்டுமன்று. வளமிக்கது என்பதாலும் எவரும் வியந்து பாராட்டத்தக்கதாகிறது. அந்த வளம் கெடாமலும், மேலும் வளரவுமான செயல்களைச் செம்மையாக்கித் தருவது உமது கடமையாகும்.

தமிழ், ஆட்சிமொழியாக எல்லாத் துறைகளிலும் திகழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் வெற்றி பெற்றிட உமது நல்லார்வம் நிரம்பத் தேவை.

உலகுடன் ஒட்டி வாழ்ந்திட, உலகின் அறிவுக் களஞ்சியத்தின் துணைபெற ஆங்கிலமொழியறிவு இன்றியமையாததாகிறது.

இந்தியாவின் பல பகுதிகளுக்கு இணைப்பு மொழியாகவும், இந்தியாவுக்கும் வெளிநாடுகளுக்கும் இணைப்பு மொழியாகவும் ஆங்கிலம் இருந்திடட்டும் என்பதனை நாட்டுப்பற்று அற்றதன்மை என்றும் கூறுவாருளர். கூறுவார் என்று மட்டுமே குறிப்பிட்டேன். கருதுவார் என்று கூறவில்லை, காரணத்தோடு!

ஆங்கிலம் முன்பு ஆதிக்கம் செலுத்தியவரின் மொழி என்பதாலே, அதனை இணைப்பு மொழியாகக் கொள்வது தேசியத் தன்மானமற்றது என்று கூறுபவர் அந்த ஆங்கில நாட்டுப் பணத்தைக் கடனாகவும் இனமாகவும் பெற்றுத் தொழில் வளர்த்திட முனைவதை, தேசியத் தன்மானத்தைக் கெடுப்பது என்று கூறிடக் காணோம்.

தொழில் நுட்ப அறிவுபெற்றிட ஆங்கிலேயரின் துணை தேடும்போது, இந்தப் பேச்சு எழக்காணோம்!

மொழி பற்றி மட்டும்தான் இப்பேச்சுப் பேசுகின்றனர்.

எனவேதான், அவர்கட்கு ஆங்கிலம் கூடாது என்ற கருத்தில்லை-கூறமட்டும் செய்கிறார்கள் என்றுரைத்தேன்.

## அன்று புறப்பட்டது வேந்தர் படை; இன்று புறப்படுவது அறிவுப்படை!

ஆங்கிலம் கூடாது என்று கூறுவதுடன், இந்தியே இணைப்புக்கு ஏற்றமொழி என்று அவர்கள் வலியுறுத்தும் போது, கூறுபவரின் உண்மை நினைப்பும் வடிவமும் நன்றாகத் தெரிகின்றன.

இந்தப் போக்கு வெற்றி பெற விடமாட்டோம் என மாணவர்கள் உறுதியுடன் நிற்பதனை அறிந்திருக்கின்றேன்

மொழிப்பற்றின் எடுத்துக் காட்டாகத் திகழும் மாணவர்கட்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோது, மொழிப் பிரச்சினையிலேயுள்ள சிக்கல்களை, புகுத்தப்பட்டுள்ள சிக்கல்களை, நீக்குவதற்கான முயற்சிகளை மொழிப் பற்றிலே முழு நம்பிக்கை கொண்டுள்ள தமிழக அரசிடம் ஒப்படைக்க வேண்டும் நம்பிக்கையுடன், என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்கலைக்கழகத்தில் பயிலும்காலை வாழ்க்கையின் நீண்ட பெரும்பயணத்திலே, இது பாசறைப்பருவம் என்ற உணர்வுடன் இருந்திடுவதே முறையாகும்.

பட்டம் பெற்றிடும் நண்பர்களே! உம்மிடம் நாடு நிரம்ப எதிர்பார்த்த வண்ணமிருப்பதனை அறிந்து, அதற்கேற்ப உமது செயல்முறைகளை வகுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இம்மாமதுரையினின்றும் புறப்பட்ட படைகள், மாநிலம் மெச்சிடும் வெற்றிகளை, முடிமன்னர் நாட்களிலே பெற்றளித்தன என்று வரலாறு கூறுகிறது.

இன்று புறப்படும் படை அறிவுப்படை! இப்பல்கலைக் கழகத்தினின்றும் அமைந்து வெளிக்கிளம்பும் முதற்படை.

இதனை வாழ்த்தி, வரவேற்று பாராட்டி, ''சென்று வருக; வென்று வருக!'' எனக் கூறிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில் நான் உள்ளபடி பெருமிதம் கொள்கிறேன்.

தமிழ் உமது முரசாகட்டும்! பண்பாடு உமது கவசமாகட்டும்! அறிவு உமது படைக்கலனாகட்டும்! அறநெறி உமது வழித்துணையாகட்டும்! உறுதியுடன் செல்வீர்! ஊக்கமுடன் பணிபுரிவீர்! ஏற்றமிகு வெற்றியினை ஈட்டிடுவீர்! பாட்டுமொழியுடைய நமது தாயகம் வாழ தரணிக்குத் துணைநின்றிடும் தகுதி பெறச் சென்றிடுவீர்! வென்றிடுவீர்!

43155

# சுருங்கிய உலகம்

முன்பெல்லாம் காசிக்குப் போகிறேன், திருப்பதிக்குப் போகிறேன் என்பார்கள். இப்படி இருந்த இந்த நாட்டில் வாரத்துக்கு வாரம், மாதத்துக்கு மாதம் அமெரிக்கா போகிறேன்--ரஷ்யாவுக்குப் போகிறேன் என்று கூறப்படுவதைக் கேட்கிறோம்--நம்நாடு எந்த அளவு முன்னேறியுள்ளது என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும்.

காசிக்குப் போகிறவர்களிடம் மறக்காமல் கங்கா தீர்த்தம் கொண்டு வாருங்கள் என்பார்கள். பழனியாயிருந்தால் பஞ்சாமிர்தம் கொண்டு வரும்படிச் சொல்லுவார்கள்.

ரஷ்யாவுக்குப் போகும் நமது நண்பர்களிடம் நாம் என்னென்ன கேட்போம். எப்படி அந்த நாட்டில் ஆட்சி அமைந்துள்ளது? அங்கு மாநகராட்சிகள் எப்படி அமைந்துள்ளன? எப்படி அந்த நாட்டுக் குழந்தைகள் எந்த அளவு மகிழ்ச்சியோடு இருக்கின்றன? இதையெல்லாம் தெரிந்துகொள்ள நாம் விரும்புவோம்.

உலகம் எப்படி நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள நம்மிடம் நிரம்ப ஆர்வம் உள்ளது.

பக்கத்து வீட்டுக்காரன் எப்படி இருக்கிறான் என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாதது பழைய காலப் பழக்கம். இன்று நெடுந்தூரத்து நாடுகளானாலும் அங்கே மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நேரில் தெரிந்து கொள்ள விழைகிறோம். அந்த நாட்டில் என்னென்ன விந்தைகள் உள்ளன என்பதை அறிய விரும்புகிறோம். அத்தனை ஆர்வம் உள்ளது.

முன்னாள் மேயர் முனுசாமி ஏற்கெனவே ரஷியாவுக்கு சென்று வந்தவர். சிட்டிபாபுவும் அயல் நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார். கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் தற்போது மலேசியா பயணம் மேற்கொண்டுள்ளார்.

பாராளுமன்றக் கழக உறுப்பினர் மனோகரன் இரண்டு முறை ஆப்பிரிக்கா நாடுகளைச் சென்று பார்த்துவிட்டு வந்துள்ளார். மற்றொரு பாராளுமன்ற உறுப்பினரான ராஜாராமும் உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று வந்துள்ளார். நானும் ஜப்பான் வரை சென்று வந்திருக்கிறேன். அங்கு காணுகின்றவற்றை-தெரிந்தவகையில் புகுத்தலாம் என்பதை நம்மவர்கள் தெரிந்து சொல்ல இந்த அயல் நாட்டுப் பயணங்கள் துணையாக இருக்கும்.

## உலகம் சுருங்கிவிட்டது

உலகம் சுருங்கி வருகிறது. உலக நாடுகள் நெருங்கி வருகின்றன.

25 வருடங்களுக்கப்பால் மிஞ்சிப் போனால் 50 வருடங்களுக்கப்பால் இங்கிருந்து சந்திர மண்டலத்துக்கு ஒருவர் போகிறார். அவருக்கு வழியனுப்பு விழா என்று இதே இடத்தில் நிச்சயம் நடக்கும். நாடுகள் மட்டுல்ல, அண்டங்கள் ஒன்றை ஒன்று நெருங்கி வரும் காலம் இது.

ரஷ்யா என்றாலே குனிந்தவன் நிமிர்ந்து நிற்பான்; அழுது கொண்டிருப்பவன் முகத்தில் புன்முறுவல் பூக்கும்; பாட்டாளி தனக்கொரு நாடு அமைந்ததாக நினைப்பான். உலகத்துக்கே புதிய செய்தியை புதிய நடைமுறையைக் கொடுத்த நாடு ரஷ்யா.

அப்படி இந்த நாடு புகழெய்திடக் காரணம் என்ன? கொடுங்கோன்மையை வீழ்த்திப் பயங்கரப் புரட்சிக்குப்

பின் பாட்டாளிகளது அரசை அவர்கள் அமைத்தார்கள். அப்படி அரசு அமைத்த பிறகு மக்களோடு நெருக்கமான தொடர்பு கொண்டு தோழமை உணர்ச்சியோடு செயல் பட்டனர். வீணையொன்று நல்ல நாதம் தரவேண்டுமென்ருல் அதன் நரம்புகளில் சில அறுந்தும், சில வளைந்தும் இல்லாமல் எல்லாமே ஒரு சீராக இருக்க வேண்டும்—அறுந்தும் வளைந்துமிருக்குமானுல் எந்தப் பெரிய வித்துவான் ஆனுலும் வாசிக்க இயலாது.

சீராக இருந்து நல்ல நாதம் எழுப்பும் வீணையைப்போல ரஷியாத் தலைவர்கள் ஒற்றுமையாக இருந்து, ஜார் கொடுங்கோன்மையை ஒழித்துப் புதிய அரசை நிறுவினர். நினைத்தாலே பொசுக்கிவிடும் கொடுங்கோன்மை அது.

சோவியத் நாட்டுக்கும் நமக்கும் நிறைந்த தோழமை நிலவுகிறது. பெரிய தொழில் திட்டத்துக்கு நிரம்ப ஒத்துழைத்து வருகிருர்கள். அவர்களது ஒத்துழைப்போடு அரக்கோணத்துக்குப் பக்கத்தில் பெரிய தொழிற்சாலை ஒன்று ஏற்பட இருக்கிறது. அவர்களிடமிருந்து நமக்கு நல்ல ஒத்துழைப்புக் கிடைத்து வருகிறது.

தோழர்கள் செல்லவிருக்கும் வெளிநாடு அன்னிய நாடே என்ருலும், நம் அன்மைப பெற்ற தோழமை நாடு

# உண்மையை உணர்ந்திருந்தால் ஊர்ச் சண்டை ஏது?

**ஆ**யிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னாள் தோன்றிய ஜைன நெறியை நல்ல முறையில் பாதுகாத்து, அந்த நெறியிலேயே நடப்பது மட்டுமல்லாமல் மற்ற சமுதாயத்தினரும் அந்த நெறியிலே நடந்து வாழ்ந்து சிறக்க வேண்டுமென்பதிலே அக்கறை காட்டுகின்றவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மகாவீரர் போதித்த தத்துவங்கள் நல்ல மார்க்கங்களாகும்—நல்ல நெறிகளாகும்.

''ஐம்புலன்களை அடக்கு-பொருள்களின்மீது ஆசைவைக்காதே'' என்றெல்லாம் இங்கு எழுதியிருப்பதைக் காண்கிறேன். இந்த உண்மைகளையெல்லாம், உண்மையிலேயே உலகில் உள்ளோர் அறிந்து உணர்ந்திருப்பரேயானால், சண்டைச் சச்சரவுகள் ஏற்பட்டிருக்காது. ஐக்கிய நாடுகள் மன்றமும் தேவைப்பட்டிருக்காது.

மனித சமுதாயத்தை வழி நடத்தும் மார்க்கங்கள் எல்லாம் நான்கு மாடிக் கட்டிடங்களாக உள்ளன என்றாலும், இரண்டு மூன்று மாடிகளுக்குத்தான் ஒழுங்கான பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. மூன்றாவது மாடியிலிருந்து அடுத்த மாடியைப் பார்த்தால், தொங்குகிற நூல் ஏணியில் ஏறிச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது.

ஜைன மதத்தை அறிந்த அறிஞர்களிடமும், பெரியவர்களிடமும் எனக்கு நெருங்கிய தொடர்பும், பழக்கமும், உண்டு. ஜைன சமயம் பற்றிப் பல தடவை நாங்கள் விவா

தித்திருக்கிறோம். அப்போது நான் வருத்தப்பட்டேன். நெறிகள் சரியில்லை என்பதால் அல்ல! இந்த நெறிகளை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு நாம் வளர்ந்துகொள்ளவில்லையே என்பதுதான் அதற்குக் காரணம். அந்த நெறிகளுக்கு ஏற்ற வளர்ச்சி இல்லையே என்றகுறை இருப்பதால், அந்த நெறிகளை எல்லாம் மறந்துவிட வேண்டும் என்று நான் கூறமாட்டேன்!''

வேலூரில் 35 ஆண்டுகள் பணிபுரிந்த ஒரு வெள்ளைக்காரர் ஓய்வு பெற்ற காலத்தில் தாயகம் செல்ல விருந்த பொழுது, வழியனுப்பு விழாவுக்கு என்னையும் அழைத்திருந்தார்கள்; எவ்வளவோ மைல்களுக்கு அப்பாலேயிருந்து வந்து—வேற்று நாட்டுக்காரராக இருந்தாலும் விழுமிய தொண்டராக--பிறர் பயனடையும் மருத்துவ நிலையங்களையும் கல்விக்கூடங்களையும் அரண்மனைகளையும் கட்டித் தந்து பணிபுரிந்தவர்களாயிற்றே என்ற கருத்தில், அமெரிக்காவிற்குச் செல்லவிருந்த அந்தக் கிருத்தவரை வழியனுப்பச் சென்றேன்.

அப்போது வேலூரிலிருந்து இந்த மதத்தைச் சார்ந்த ஒருவரிடமிருந்து எனக்கு மிரட்டல் கடிதம் வந்தது. 'கிருத்துவரை வழியனுப்பும் விழாவிலே கலந்து கொள்ள வந்தால் நாங்கள் கறுப்புக் கொடி காட்டுவோம்!' என்று அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது; எங்கள் கட்சிக் கொடியிலேயே கறுப்புத்தான் இருக்கிறது என்று அப்போது வேடிக்கையாகச் சொன்னேன்.

எவ்வளவோ தூரத்திற்கு அப்பாலிருந்து வந்தவர்கள் என்றாலும்--அயலவர்கள் என்றாலும்--அவர்கள் செய்த நல்ல காரியத்தைத் தமிழக மக்கள் வரவேற்க வேண்டும்; அது போன்ற காரியங்கள் செய்யவும் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்- ஜைன மதத்தைச் சேர்ந்தவர்களும் மருத்துவ மனைகளையும், கல்லூரிகளையும் ஏற்படுத்தி, ஈட்டிய

பொருளை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்துவதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் பிறந்த காஞ்சிபுரத்திலும், அதைச் சுற்றிய சிறூர்களிலும் ஜைன மதத்தைச் சேர்ந்த மக்கள் இருக்கிறார்கள். அவர்களுடன் எனக்குத் தொடர்பு உண்டு.

'இந்த மார்க்கம் தமிழர்களுக்கே உரிய மார்க்கம்' என்று கூட, தமிழ் ஆய்ந்த வல்லுநர்கள் சிலர் கூறுகின்றனர்; ஆகவே, இந்த மார்க்கத்தில் எனக்குத் தொடர்பும் ஈடுபாடும் உண்டு.

## வழிகாட்டிகள் இருந்தும் வாழ்வில் முன்னேறவில்லை நாம்

உலகத்திலேயே நம்முடைய நாட்டில் தான் பெரும் பெரும் மகான்கள்-வழிகாட்டிகள் தோன்றி இருக்கின்றார்கள். நான்கூடச் சில சமயம் நினைத்துப் பார்ப்பேன்-இப்படிப்பட்ட பெரியவர்கள் தோன்றாமல் இருந்திருக்கலாம்; அவர்கள் தந்த அந்த நல்ல சிந்தனைகள் தோன்றாமல் இருந்திருக்கலாம், என்று; பெருமைக்குரிய வழிகாட்டிகள் பலர் இருந்தும் கூட, 'நாம் இந்த அளவுக்குக் கெட்டுப்போயிருக்கிறோமே' உயர்ந்த நிலையில் இல்லையே என்பதால் தான், அப்படிக் கருதத் தோன்றியது.

இது போன்ற வழிகாட்டிகளே தோன்றாத நாடுகளில், எவ்வளவோ முன்னேறி இருக்கிறார்கள்—வளர்ச்சி அடைந்திருக்கின்றார்கள்; ஆனால், வழிகாட்டிகள் இருந்தும்—அவர்கள் வழிநடத்திச் செல்பவர்களாக இருந்தும் நாம் முன்னுக்கு வரவில்லை! காரணம், நாம் சொல்பவர்களாக இருந்தோம்—செய்யத் தவறிவிட்டோம்! ஆகவே, இனிமேல் சொல்வதுடன் செய்து காட்டவும் வேண்டும்

புத்தர் சொன்னார்—சித்தர் கூறினார்—மகாவீரரும் முகம்மது நபியும், காந்தியடிகளும், இராமலிங்க அடிகளும் சொன்னார்கள் என்று தான் சொல்கிறோமே தவிர, அவற்றை செய்து காட்டுகின்றோமா?

'அவர் அப்படிச் சொன்னார்—இவர் இப்படிச் சொன்னார்' என்று கூறிவிட்டு, 'நீ என்ன செய்யப் போகிறாய்?' என்றால் விழித்து நிற்போரைத்தான் நாம் பார்க்கின்றோம்!

ஆகவே, சொல்லுவதோடு மட்டும் நில்லாமல் செய்தும் காட்ட வேண்டும்; அப்போதுதான் அந்த நன்னெறிகளை உணர்ந்தவர்கள் ஆவோம்!

மகாவீரர், ஆண்ட அரசர்களையும்—அண்டி உயிர் வாழ்ந்த ஆண்டிகளையும்—பெரும் பணக்காரர்களையும்—சிரமப்பட்டு பிழைத்த ஏழைகளையும்—'உயர்ந்தோர்' என்று சொல்லிக் கொண்டோரையும்—'தாழ்ந்தவர்' என்று கூறப் பட்டோரையும் தமக்குப் பின்னே வழிநடத்திய மாமனிதர் பின் செல்லவும் அவர் விட்டுச் சென்ற நல்ல காரியங்களை நாமும் கடைப்பிடித்து ஒழுகி, அதன் மூலம் நல்ல வாழ்க்கை வாழவும் வேண்டும்.

நான், நல்ல வாழ்க்கை என்று கூறியது, தாம் மட்டு மல்லாது பிறரும் உலகத்தில் மகிழ்ச்சியடையக் கூடிய அளவில் வாழவேண்டும் என்பதைத்தான் நல்வாழ்வு எனக் கருதி, மக்கள் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று குறிப்பிடு கிறேன்.

# காக்கும் கரங்கள்

நமது பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவளிக்கும் திட்டத்துக்கு அமெரிக்க அற நிறுவனமான 'கேர்' அளித்து வருகிற உதவியை நான் மதித்து வரவேற்கிறேன். நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் நல்லுறவு பலமடைந்து அதன் விளைவாக பல தொழிற் கூடங்களும் மருத்துவமனைகளும் ஏற்பட்டுள்ளதைப் பார்க்கிறோம்.

கல்வித் துறைக்கும் அவர்களது உதவியால் நல்ல ஊக்கம் அளித்து வருகிறார்கள்.

இந்த நல்ல நாளும், நடக்கின்ற நிகழ்ச்சிகளும் அத்தகைய நல்ல கருத்துக்களை நம் மனதில் உண்டாக்கட்டும்.

நலிந்தோருக்கு உதவுவது என்ற பொது நலத் தத்துவத்தினடிப்படையில் அமெரிக்கர்கள் இந்த உதவிகளைச் செய்து வருகிறார்கள். ஒரு பக்கத்திலே நலிவும் மறு பக்கத்திலே வளமும் என்ற நிலைஇருக்குமானால் அது உலகம் முழுவதும் பரவும்.

நாம் இங்கேதிரைப்படங்களுக்கும் ''காக்கும் கரங்கள்'' என்று பெயரிடுகிறோம். அமெரிக்க மக்கள் தங்களது கரங்களைக் காக்கும் கரங்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குமுன்னதாகத் தங்கள் கரங்களை வலிவுள்ள கரங்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

வலிவுள்ள கரங்களால்தான் பிறரைக்காக்கவும் முடியும். எனவே நாம் முதலில் நமது கரங்களை வலிவுள்ள கரங்களாக ஆக்கிக் கொள்வோம். அப்போது பிறரை நாமும் காக்க முடியும்.

கரங்கள் எந்த அளவு வலிவுள்ளவையாக இருக்கின்றனவோ அந்த அளவு உள்ளம் மென்மையானதாக இருக்க வேண்டும்.

நானும் திரைப் படத்திலே, ஈஸ்வரன் இரும்புப் பெட்டிக்கும் இதயத்துக்கும் சம்பந்தம் வைப்பதில்லை என்று எழுதினேன்.

நம்முடைய நாட்டு ஈஸ்வரன் ஒருவேளை அப்படியிருக்கலாம். ஆனால் அமெரிக்க மக்களுடைய பணத்துக்கும் அவர்களது இதயங்களுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு இருப்பதைப் பார்க்கிறோம்.

அமெரிக்க மக்களும் ஆரம்ப காலத்திலே நம்மைப் போலத் தான் இருந்தார்கள். இப்போது உள்ள வலிவு, ஆப்ரகாம்லிங்கன் காலத்தில் இருந்ததில்லை. காடுகளாகவும், பள்ளத்தாக்குகளாகவும், சதுப்பு நிலமாகவும் தானிருந்தது, ஆதி நாள் அமெரிக்கா.

இன்று அந்நாடு பொன் கொழிக்கும் பூமியாக உள்ளது தாங்கள் தேடிப்பெற்ற செல்வத்தைத் தேக்கி வைத்து உலகில் பரவிடச் செய்கிறார்கள்.

எவ்வளவு விரைவாக நாம் அந்த வலிவைப் பெறுகிறோமோ அந்த அளவு நமது தன்மானம் தரணியில் உயரும்.

அந்த வலிவினைத் தேடிக் கொண்டு நம் கரங்களைக் காக்கும் கரங்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

இன்று நம் கரங்கள் கேட்கும் கரங்களாக இருக்கின்றன. நாம் அரிசி, நிதி கடன் கேட்பவர்களாக இருக்கிறோம்.

இந்த உண்மையை உணர்ந்து, இந்தச் சவாலை ஏற்று தன்னிறைவுப் பாதையில்—தன்மானப் பாதையில் நாம் வேகமாக நடைபோட வேண்டும். அந்தப் பாதை நீண்ட நெடியது. அதில் நடக்க நம்மை நாம் தயாராக்கிக் கொள்ள வேண்டும்.

நல்ல மனிதர்களாய், நற்குணமுடையோராய், புகழ் ஓங்கி எல்லா வகை ஏற்றமும் பெறத்தக்கவர்களாய் நமது சிறுர்கள் வளரவேண்டும்.

# சீர்திருந்தும் கூவம்

வெகு காலமாகவே துர்நாற்றம் பிடித்த ஆறு என்று ஏசப்பட்டுவந்துள்ள இந்த ஆறு இன்று மிகுந்த பாக்கியம் செய்துள்ளது. எந்த ஒரு ஆற்றுக்கும் இப்படி ஒரு சேர ஐந்து மந்திரிகள் சென்றதில்லை. அழுக்காற்றை நல்ல நீரோடும் ஆறாக ஆக்கும் திட்டத் துவக்கத்துக்கு ஐந்து மந்திரிகளும் வந்திருக்கிறார்கள்.

தமிழகத்தின் பல பகுதியிலிருந்தும் இங்கு புதிதாக வந்து போகக் கூடியவர்கள் அவரவர் ஊர் சென்றதும் இந்த ஆற்றின் துர்நாற்றம் பற்றியே பேசுவார்கள். 10 - 15 ஆண்டுகளுக்கு முன் இது தான் அன்றாடப் பேச்சுக்களில் ஒன்றாக இருந்திருக்கும்.

புறப்படுகிற இடத்தில் தூய்மையாகவே புறப்படுகிற இந்த ஆறு அலைந்து வளைந்து அழுக்கைச் சேர்த்துக் கொள்ளுகின்றது.

'கடலோடு போ' என்று நகர மக்கள் அதை விரட்டுகிறார்கள். கடல் அலைகளோ நீ இங்கே வராதே என்று விரட்டுகின்றன. ஆக இந்த பலமான போராட்டம் பலகாலமாகவே நடை பெற்று வருகின்றது.

இதற்கொரு முற்றுப்புள்ளி வைக்கக் கூடிய ஒரு திட்டத்தை பொறியியல் வல்லுநர்கள் தந்திருக்கிறார்கள்.

அதன்படி இத்திட்டம் நிறைவேறியதும் அது தரக்கூடிய எழில் தோற்றத்தைத்தான் வரைபடமாக்கி இங்கே வைத்திருக்கிறார்கள். கிடைப்பதற்கரிய கற்பனை அல்ல. உண்மை நிலையாக இது உருவாகும். இந்தத் திட்டம் சீரோடும் சிறப்போடும் நடைபெறும்.

# தேம்ஸ் நதிக் கரையினிலே

மற்ற மாநகரங்களிலெல்லாம் இத்தகைய இயற்கை வசதி அதாவது நகருக்கு மத்தியில் ஆறு ஓடுவதை பெரும் வாய்ப்பாகக் கருதுகிறார்கள்.

தேம்ஸ் நதிக்கு லண்டன் மாநகர மக்கள் அளித்துள்ள முக்கியத்துவம் பற்றி அங்கு போய்வந்தவர்கள் சொல்லவும் படித்தும் அறிந்திருக்கிறேன்.

உல்லாசமாக உலாவரத்தக்க பூங்காற்று வீசுகின்ற பூங்காக்கள் நிரம்பிய கரைகளை அந்த ஆறுகள் பெற்றிருக்கின்றன.

அப்படிப்பட்ட இயற்கை அழகைக் கொண்ட இந்த நதி சென்னை நகரினுள் ஊடுருவிப் பாய்கிறது. மக்கட் தொகை நிரம்பிய பகுதிகளின் வழியே இந்நதி ஊடுருவி வருவதை இந்த வரை படத்தை உற்று நோக்கினால் தெரியும்.

சிலகாலம் வெள்ளக்காடாகவும், சிலகாலம் சேறும் சகதியும் மிகுந்ததாகவும் ஒழுங்கின்றி இருக்கும்.

சிலகாலமாகவே இதை சீரமைப்பது பற்றிப் பேசப் பட்டு நிபுணர்களால் திட்டங்கள் தீட்டப்பட்டு வந்துள்ளன.

கூவம் சீரமைப்பு பற்றி விவாதிக்கக் கூடிய கூட்ட மொன்றில் நானும் பங்கேற்றதாக எனக்கு நினைவு.

வேறு காரியங்களில் அரசு ஈடுபட வேண்டியிருந்ததால் இதனைக் கவனிக்க இயலாமற்போனது. மேலும் இதை புறக் கூட்டிலேயே போட வேண்டாம் என்றே நாங்கள் வந்ததும் இதை நிறைவேற்றத் தீர்மானித்தோம்.

## கருணாநிதியின் ஆர்வம்

முதல் பட்ஜெட் தயாரிக்கும் போதே இந்தத் திட்டத் துக்கு பணம் ஒதுக்கும்படி என்னுடைய தம்பி கருணாநிதி என்னைத் துளைத்துக் கொட்டி விட்டார்—ஒதுக்கியிருக் கிறேன் என்று சொல்லியும் திருப்தியடையாமல் அது பட் ஜெட்டில் இருக்கிறதா என்று பார்த்த பின்னரே திருப்தி அடைந்தார்.

இவ்வாறாக இப்போது ரூபாய் 2 கோடி அளவுக்கு செல விடத்தக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டு இன்று அதன் கால் கோள் விழாவும் நடைபெறுகிறது.

தமிழகத்தில் மிகச் சிறந்த திறம் படைத்த நிபுணர்கள் இருக்கிறார்கள். குறைந்த செலவில் இத்திட்டத்தை நிறை வேற்றித்தர அவர்கள் முயலவேணடும். தொகைதான் ஒதுக்கியாகிவிட்டதே என்று இருந்திடாமல் குறிப்பிட்ட தொகையைக் காட்டிலும் குறைந்த செலவில் நிறைவேற் றித் தரவேண்டும். இதன் மூலம் அவர்களுக்கு நிறைந்த புகழ் வந்தடையும்.

## இப்படியும் ஒரு ஆறு?

பார்க்கிற வெளிநாட்டாரெல்லாம் இப்படி ஒரு ஆறு இந்த ஊரில் இருந்ததா? என்று கேட்கும்படியாக அமைய வேண்டும்.

இதற்குமுன் இந்த ஆறு இப்படி இருக்கவில்லை. நாங் கள் இதனை இப்படி திருத்தி அமைத்திருக்கிறோம் என்று பெருமிதத்துடன் கூறுகிற நிலைமை இருக்கவேண்டும்.

நம்முடைய நாட்டில் இயற்கையின் எழிலை அழிக்கும் பழக்கமுடைய மனிதர்கள் உண்டு. நல்ல பூங்காவை

இருக்கவிட மாட்டார்கள். அதை அழிப்பதிலே அவர்களுக்கொரு தனி இன்பம்.

நல்ல கட்டிடம் இருந்தால் கரியால் அதன் சுவர்களில் கிறுக்கி வைப்பார்கள். நல்ல வாய்க்கால் ஓடினால் கல்லையும் மண்ணையும் அதில் தள்ளி நீர் ஓடாதபடிச் செய்துவிடுவார்கள். இப்படிப்பட்ட விந்தை மனிதரை வேறு எந்த நாட்டிலும் பார்க்க முடியாது.

எழிலும் பயனும் ஒருசேர அமைந்த சீரிய திட்டம் இது— இதனோடு இணைந்த பக்கிங்காம் கால்வாய் சீரமைப்புத் திட்டம் வாணிபத் துறையில் ஆந்திரத்துக்கும் தமிழகத்துக்கும் நெருக்கமான தொடர்பு ஏற்படுத்த உதவும். அந்த கால்வாயும் பலவருடங்களாகத் தூரு வாராமல் விடப்பட்டதால் படகுப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது. போக்குவரத்திலேயே நாவாய் போக்குவரத்தே செலவு குறைந்தது. பக்கிங்காம் கால்வாய் சீரமைப்புத் திட்டம் பற்றியும் பொதுப்பணி அமைச்சர் கோடிட்டுக் காட்டினார்.

நகருக்கு எழில் தோற்றத்தையும் வாணிபப் பெருக்கையும் அளித்திடக் கூடியது இந்தத் திட்டம்.

இத்திட்டத்தை நிறைவேற்றி சென்னையைச் சிங்கார திருநகராக்குவது நமது கடமை!

# சீர்மிகு சீரணி

வீட்டுக் கிணற்றிலே நீர் இறைத்துக் கொடுக்க முடியாதவர்களும் கூட தேர் இழுக்கச் செல்வார்கள்.

தேர் இழுக்க முடியாதவர்கள் தங்கள் கைகளில் பெரிய விசிறிகளைப் பிடித்துக் கொண்டு தேர் வடத்தைப் பிடித்து இழுப்பவர்களுக்கு விசிறுவார்கள்-காற்றுவராது; சில நேரங்களில் விசிறி தேர் இழுப்பவரின் முதுகைத் தாக்கும். விசிறியது போதும் நிறுத்து என்று சொல்லுவார்கள்.

ஊருக்குழைப்பது என்ற இயற்கைப் பண்பை ஒன்று படுத்த வேண்டும்; இன்னின்ன பணிகளை மேற்கொண்டால் நல்ல பலன்களைக் காணலாம் என்ற உணர்வை ஊட்ட வேண்டும். தேவையான கருவிகளைக் கொடுக்க வேண்டும்; சரளைக் கற்கள்-உருளைகள் கிடைக்க வில்லையென்றால் அவை கிடைக்கச் செய்ய வேண்டும்; இவைகளுக்கெல்லாம் சர்க்கார் அதிகாரிகள் ஒத்துழைக்க முன் வரவேண்டுமென நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நேரு இத்தகைய பொதுநலத் தொண்டு குறித்துக் கனவு கண்டார். 20 வருடமாக மக்கள் தான் உழைத்திருக்கிறார்கள். காரணம் தெரியாமலே உழைத்திருக்கிறார்கள். யாருக்காக உழைக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளாமலே உழைத்திருக்கிறார்கள். பலனென்ன என்று தெரியாமலே உழைத்திருக்கிறார்கள்.

நமக்காக நம் குடும்பத்துக்காக உழைக்க வேண்டும், மீதமிருக்கும் நேரத்தில் ஊர் நன்மைக்காக உழைக்கவேண்டும்.

இருவண்ணக் கொடியைக் கையில் பிடித்து 'திராவிட முன்னேற்ற கழகம் வாழ்க! திராவிட முன்னேற்றக் கழகம் வளர்க' என்று குரலெழுப்பிச் செல்வதற்காகச் சீரணிப்படை அமையவில்லை. இப்படையைக் கொண்டு தன்னை வளர்த்துக் கொள்ளவேண்டிய நிலையில் தி. மு. கழகம் இல்லை. அப்படியென்றால் 1966 ல் அல்லவா இதனை ஆரம்பித்திருக்க வேண்டும்.

ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பின்னர் இதைச் செய்திருப்பதற்குக் காரணமே மக்கள் நலப் பணிக்காகத்தான்.

எந்தச் சாரார் ஆயினும் சரி, எந்த மக்களாயினும், என்ன குறையாயினும் என்னிடத்திலோ என் நண்பர்களிடத்திலோ தாராளமாக வந்து சொல்லலாம். நாங்கள் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

நான் இங்கே உட்கார்ந்திருக்கும்போது உங்கள் சட்டையிலே பூச்சி இருக்கிறது—தட்டி விடுங்கள்'' என்று பக்கத்தில் இருப்பவர்கள் சொல்வாரானால் ''இது எனக்குத் தெரியாதா?'' என்று கேட்பேன்? சில நேரங்களில் சிறிய விஷயங்கள் கூடத் தெரியாமல் போகலாம்.

கோட்டையிலே வீற்றிருக்கும் எங்களுக்கு மக்களின் குறைகள் என்னென்ன என்று தெரிந்து விடும் என்று எண்ணியிருந்துவிடாமல் அப்போதைக்கப்போது உள்ள குறைகளை எடுத்துக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அப்படிக் கூறும்போது ஒவ்வொரு நாணயத்துக்கு உபகரணங்கள் இருப்பது போல ஒவ்வொரு நாணயத்துக்கும் இரண்டு பக்கங்கள் உண்டென்பதை மனதிற்கொண்டு கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர்த் தட்டுப்பாடு இயற்கையாக ஏற்பட்ட ஒன்றாகும். ஐந்தாறு லட்சம் பேர் வாழ்ந்த சென்னைக்கென்று வகுக்கப்பட்டது, இப்போதுள்ள தண்ணீர்த் திட்டம். இப்போது 22 லட்சம் பேர் இந்நகரில் வாழ்கிறார்கள்.

நாகரிகமான ஓரளவு வசதியோடு கூடிய வீடுகளில் வாழக்கூடும். மாளிகைகளில் மற்ருெரு லட்சம் பேர் இருக்கக் கூடும். நாலு குடித்தனம் ஐந்து குடித்தனம் என்றுள்ள வீடுகளில் ஐந்தாறு லட்சம் பேர் இருப்பார்கள். மற்றுமுள்ளோர் எங்கெங்கெல்லாமோ வாழுகிருர்கள்.

நான் யாரையாவது அழைத்து அந்தக் கூவம் நதியோரம் போய் குடியிரு என்ருல் என் கன்னத்தில் அறைவான். ஆனுல் யாரும் சொல்லாமலே அங்கே அவர்களாகவே வாழுகிருர்கள்; நாற்றமாயிற்றே என்ருல் ஏதோ ஒரு நாளில் அரை மணி-கால் மணி அப்படியிருக்கும் என்கிருர்கள். இவர்கள் இப்படி குடியிருப்புக்காக வேண்டி இருக்கும் நாற்றத்தையும் இல்லை என்கிருர்கள்.

இவர்களது குடிசைகளை வெளிநாட்டார் பார்த்தால் நம்மைப்பற்றி மிகத் தாழ்வான கருத்தைக் கொள்வார்கள். ஆகையினுல் தான் கூவத்தின் நாற்றத்தைப் போக்கி சேற்றை வாரி கூவத்தை எழிலுடையதாகச் செய்திட திட்டமிட்டுள்ளோம்.

லண்டனுக்கு நான் போனதில்லை. போய் வந்தவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். லண்டன் நகருக்கு அழகைக் கூட்டுவது அந்நகரின் பெரும் பகுதியில் ஊடுருவிச் செல்கிற தேம்ஸ் நதி என்பதாகும். அதுபோல கூவம் சென்னை நகரின் மையப்பகுதியில் இருக்கிறது. ஏனே இந்த எளிய திட்டம் என்னைவிடப் பெரியவர்கள்—வல்லவர்கள் ஆண்ட நாட்களிலே செய்யப்படாமலே இருந்தது; எளிய காரியம் தானே என்று இருந்துவிட்டார்கள் போலும்! நாங்கள் சின்னவர்களென்பதால் சிறிய விஷயங்களெல்லாம் என் கண்ணுக்குப்படுகிறது. கூவம் ஆற்றைச் சுத்தப்படுத்தும் அப்பணியின் மூலம் நோய் நொடிகள் நீங்கும், சுகாதாரம் ஓங்கும்.

இதைப்போலவே காவிரி நீர் திட்டம் நீண்ட நாட்களாகப் பேசிப் பேசி நிறுத்தப்பட்டதே தவிர நடைமுறைக்கு வரவில்லை.

நண்பர் முனுசாமி அதைச் சொன்னார். அதையும் அவர் காமராஜரிடம் தான் முதலில் சொன்னார். காவிரி திட்டத்தின் பயன்கள் பற்றி முனுசாமி பேசியதைக் கேட்ட காமராஜர்...''நீ என்ன வக்கீலா?'' என்று அவரைப் பார்த்துக் கேட்டார்.

காவிரி தண்ணீர் திட்டம் நிறைவேற்றப்பட யிருப்பது மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்றாகும்.

காவிரித் தண்ணீர் இங்கே வருவதில் ஒரு பொருத்தம் இருக்கின்றது. காவிரிக் கரையில் காவிரித் தண்ணீரைக் குடித்து வாழ்ந்தவர்கள் தான் இப்போது இப்பகுதியில் குடியேறியிருக்கிறார்கள்.

அவர்களைத் தேடி வருகிறது காவிரி நீர்.

தண்ணீர் இந்நகரில் நிரம்பத் தேவையிருக்கிறது. பல புதிய தொழில்களுக்கும் தேவையான தண்ணீரும் கிடைக்கும்.

எங்கள் தொழிற்சாலைக்கு 2 லட்சம் காலன் தண்ணீர் கொடுக்க இயலுமா என்று கேட்கிறார்கள். நம்மால் முடியவில்லையென்றால் வேறு எந்த மாநிலத்தில் தங்கள் தொழிலை துவக்கலாமென்று பார்க்கிறார்கள். தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் கொடுக்கிறோமென்றால் பணம் வாங்கிக்கொண்டு தான் கொடுக்கிறோம்.

இதுபோல சென்னைத் துறைமுகத்துக்கு வருகிற கப்பல்களுக்கும் தண்ணீர் நிரம்பத் தேவைப்படுகின்றது. போதுமான தண்ணீர் இருந்தால் நாம் கொடுக்கலாம். இப்படி விலைக்கு விற்பதன் மூலம் மட்டும் வருடத்துக்கு ரூபாய் ஒரு கோடி வரை வருமானம் கிடைக்கும். இப்போது பணத்தை செலவிட்டு நாம் செய்தாலும் கிடைக்கிற வருவாயைக் கொண்டு அதைச் சரிகட்டலாம் என்பதோடு இந்தக் காவிரி நீர் திட்டம் இன்னும் பத்தாண்டுகளில் லாபகரமானதாகவும் ஆகிவிடும்.

# நூல்கள் இன்னும் தேவை

உலகத்தமிழர் மாநாட்டிற்கு வந்த தமிழ்ப்பற்று கொண்ட தமிழன்பர்களுக்குத் திருவாரூர் தியாகராசன் இங்கு ஒரு அரிய விருந்து கொடுத்தார்.

அதே திருவாரூரைச் சார்ந்த தம்பி கருணாநிதி எழுதிய சிலப்பதிகார நாடகக் காப்பிய வெளியீட்டு விழாவும் இங்கே நடைபெறுகிறது.

கருணாநிதி பேசும்போது நாங்கள் இருவரும் திருவாரூரைச் சார்ந்தவர்கள் என்று கூறினார்.

நம்முடைய நண்பர் பக்தவத்சலம் அவர்கள் தானும் சேர்ந்து கொள்ளவேண்டுமென்று நான் பெண்ணெடுத்தது திருவாரூர் என்று சொல்லித் தாமும் திருவாரூரைச் சார்ந்தவர் என்று கூறிக்கொண்டார்.

அவர் வேறு ஒன்று கூறுவார் என்று எதிர்பார்த்தேன். தியாகராசனும் கருணாநிதியும் திருவாரூர் என்று கூறியது போல்-விழாவுக்குத் தலைமை தாங்குகின்ற அவரும் நானும் தொண்டைமண்டலத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறுவார் என எதிர்பார்த்தேன். திருவாரூரிலும் தஞ்சையிலும் பிற பகுதிகளிலும் இருக்கும் தியாகராசன் போன்றவர்கள் தொண்டை மண்டலத்திலிருந்து சென்றவர்கள்தான். நெடுங்காலத்திற்கு முன்பே அவர்கள் சென்றதால் பந்தங்கள் அறுபட்டிருக்கலாம். ஆனால் இப்படிப் பலரைத் தொண்டை மண்டலம் அனுப்பிக் கொடுத்திருக்கிறது என்பதும் சோழ நாடு பலரை இங்கு அனுப்பிக் கொடுத்திருக்கிறது என்பதும் தமிழ் நாட்டினுடைய வரலாறாக இருந்திருக்கிறது.

யார் எந்த நாட்டைச் சார்ந்திருந்தாலும் அவர்கள் தமிழர்கள் என்ற முறையில் நாமெல்லாம் பெருமைப்பட வேண்டும்.

தமிழ் மொழியின் மாண்மைப்பற்றி நாம் மட்டுமல்ல அனைத்து நாட்டு அறிஞர்களும் இங்கு வந்து எடுத்துரைத் திருக்கிறார்கள்.

எத்தகைய ஏற்றமிகு தமிழ் மொழிக்கு நாம் சொந்தக் காரர்கள் என்ற பெருமித உணர்ச்சி நமக்கு இயற்கையாக வரத்தான் செய்யும்.

அந்த மொழியின் ஏற்றத்திற்கு ஏற்ற அளவில் நாம் ஏற்றம் பெற்றிருக்கிறோமா என்பதுதான் ஐயப்பாடே தவிர அந்த மொழியினுடைய ஏற்றம் குறித்து ஐயப்பாடு கிடையாது.

தமிழிலுள்ள காப்பியங்களும் செய்யுள் நூல்களும் எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்றால் உருவத்திலே யும் நாடக வடிவத்திலேயும் கட்டுரை வடிவத்திலேயும் பல நூல்கள் நமக்குத் தேவைப்படுகின்றன.

அந்த வகையில் தம்பி கருணாநிதி சிலப்பதிகாரத்தை நாடக உருவில் தந்திருக்கிறார். தமிழ் கற்ற அனைவரும் இதனைப் பாராட்டுவார்கள். தம்பி கருணாநிதியின் சிறந்த தமிழ் நடை அனைவரும் உணர்ந்தது.

அவர், சில விஷயங்களைப் பற்றியும்—சில போக்கைக் கண்டித்தும் எழுதுகிற தமிழாக இருந்தால்கூட படிக்கும் போது—கண்டிக்கப்பட்டவர்கள்கூட அதைப்படிக்கிறபோது நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் நம்மைத் தவறாகப் புரிந்து கொண்டல்லவா எழுதியிருக்கிறார் என்று கருதிக்கொண்டி ருப்பார்களே தவிர அவரது தமிழ் நடையிலே குற்றம் கண்டிருக்க மாட்டார்கள்—அவரது நடையில் இலக்கிய

அறிவும் கலைத் திறனும் இருக்கும். அவர் இந்த நாடகக் காப்பியத்தை எழுதுவதற்கு முற்றிலும் பொருத்தமானவர்.

கருணாநிதியின் தமிழ் நூலை ஆங்கிலத்தில் நண்பர் டி.ஜி. நாராயணசாமி நல்லமுறையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

செய்யுள் வடிவமாக இருக்கும் சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியமாக ஆக்கிய பிறகு அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது, அதிலும் செய்யுள் உருவில் தருவது என்பது கடினமானது. ஆனால் அச்சுவை கெடாமலும் பயன் மிகுந்தும் காணப்படுகிற அளவில் ஆங்கிலத்தில் இந் நூல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இன்னும் கருணாநிதி தமிழ்ப்பெருங் காப்பியங்களை நாடகங்களாக ஆக்கித் தரும் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்; ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதில் பெருமைப் படுகிறேன்.

இப்படிப்பட்ட தமிழின் பெருமைபற்றி மாநாடுகளில் கூடிப் பேசுவதில் மட்டும் திருப்தியடையாமல் தமிழ் இலக்கியத்தின் கருத்துக்களை எல்லா மக்களும் உணரத்தக்க விதத்தில் இனிய—எளிய நூல்களாக்கி வெளியிடுவதில் முனைந்து நிற்கவேண்டும். அந்தக் காரியத்தில் ஈடுபட்டுள்ள கருணாநிதியை மீண்டும் வாழ்த்துகிறேன்.

ஆங்கில மொழிபெயர்ப்பு நூலைப் பெற்றுக்கொண்ட ஆஸ்திரேலியா நாட்டைச் சார்ந்த நண்பர் ஜோர் தான் அணிந்திருந்த தமிழ் உடையைப் பார்த்தால் அவரும் திருவாரூரோ என்று எண்ணும் அளவில் இருந்தது.

தமிழ் நூலைப் பெற்றுக்கொண்ட இலங்கை அமைச்சர் திருச்செல்வத்தின் துணைவியார் திருமதி திருச்செல்வம்

இலங்கையைச் சார்ந்தவர் என்பதைவிட இலங்கையிலுள்ள தமிழன்பர் குடும்பத்தைச் சார்ந்தவர் எனலாம்.

தமிழர் என்று அவர்களை நான் சொல்வதுகூட அவர்கள் நாட்டு அரசியலில் அருவெறுப்பையும் அச்சத்தையும் உண் டாக்கிவிடுமோ? என்பதால் அப்படிக் கூறத் தயக்கப்பட் டேன்.

இலங்கை வெளிநாடு என்றாலும் நமக்கும் அவர்களுக்கும் இடையே இருப்பது இருபது மைல் தொலைவுதான்!

வாடைக் காற்று கொஞ்சம் வேகமாக அடித்தால்கூட அந்தக் காற்று இந்தப் பக்கம், இந்தக் காற்று அந்தப் பக்கம் என்ற நிலையில் இருப்பவர்கள். அப்படி அடிக்கிற அந்தக் காற்றும் நல்ல காற்றாக இருக்க வேண்டும் என்பதுதான் நமது கவலை.

சிலப்பதிகார நாடகக் காப்பியத்தை ஆக்கித்தந்த தம்பி கருணாநிதிக்கு மீண்டும் நமது நன்றி.

# சீக்கியர் மாண்பு

குருகோவிந்த சிங்கின் 301-வது பிறந்த நாள் புனிதத் தன்மையுடைய நாளாகும்.

சமூகத்தாரிடையே தோழமையையும் உறுதியையும் வளர்த்ததோடு சீக்கிய சமூகம் பிறருக்குப் பணி செய்ய வேண்டுமென்பதையும் போதித்தது.

அமிர்தசரசில் உள்ள சீக்கியக் கோயிலுக்கு நான் 3-4 தடவைகள் போயிருக்கிறேன். அந்த கோவிலுக்குள் சென்று வரக் கூடிய எவரும் சீக்கிய மதத்திடம் மிகுந்த மரியாதையுடனே திரும்புவர். அத்தனை நேர்த்தியாகவும்சுத்தமாகவும் அக்கோயில் வைக்கப்பட்டுள்ளது.

அக்கோயிலுக்குச் சென்றிருந்தபோது அங்கே நான் ஒரு காட்சியைக் கண்டேன். நன்றாக உடுத்தியிருந்த ஒருவர் அக்கட்டிடத்தின் தாழ்வாரங்களை எல்லாம் சுத்தம் செய்ததோடு அங்கிருந்த காலணிகளையெல்லாம் துடைத்துச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார். ஏனென்று நான் அவர் அருகில் சென்று கேட்டேன். பண்புகள் எல்லாவற்றிலும் தன்னடக்கமே மிக உயர்ந்த பண்பு என்பதைச் செயலால் உணரவே இவ்வாறு செய்கிறேன் என்று அவர் சொன்னார்.

சீக்கிய மதமானது மக்கள் அமைதி கிடைக்காதா என்று கேட்டு வாழ்க்கையின் மீதே வெறுப்புற்று இருந்த காலத்தில் தோன்றியது.

தங்களது மக்கள் ஒரு சமுகமாகக் கூடிப்பிணைந்து வாழவும் மக்கட் சமுதாயத் தொண்டினுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவுமே சீக்கிய சமயம் தோன்றிற்று—

சீக்கியர் கடின உழைப்பாளிகள். நான் இங்குமட்டுமல்லாமல் தூர கிழக்காசிய நாடுகளில் கண்டவரை சோம்பேறி என்று சொல்விடத் தக்க ஒரு சீக்கியரையேனும் காண முடியவில்லை.

பணி தனக்கென மட்டுமல்லாமல் சமூக முழுமையும் அதன் மூலம் நாடு முழுமையும் பயனடைய வேண்டும் என்ற மனோ நிலையுடனே அவர்கள் பணி செய்கின்றனர். தமிழர்களாகிய நாங்களும் அத்தகைய உயர்ந்த கோட்பாடுகள் உடையவர்களாயிருந்தோம். சமுதாயத்தொண்டே தமிழர் பண்பாட்டின் மையமாக விளங்கிற்று.

இதனுல் தான் தமிழகம் சீக்கியர்களை அணைத்துச் செல்கின்றது. சீக்கியப் பிரமுகர் 'எங்கள் குழந்தைகளெல்லாம் இங்கே தான் பிறந்தன'' என்றார்! ஒன்றைச் சொல்கிறேன் குழந்தைகள் மட்டுமல்ல, பேரன்களும் கொள்ளுப் பேரன்களும் இங்கேயே பிறக்கட்டும். அக்குழந்தைகளெல்லாம் சுவாசிக்கிற முதல் காற்று தமிழ் மண்ங் கமழும் காற்றாக இருக்கட்டும். தமிழ் மண்ணில் அவர்கள் தவழட்டும். நிரந்தரமாக இங்கேயே இருக்கலாம். வேறு சில சமுகத்தாரைப் போல கவலைகொள்ளத் தேவையில்லை.

## சீக்கியர் வீரம்

சீக்கிய நெறி சுரண்டலை அனுமதிப்பதில்லை; பிறர் உழைப்பின் பலனைக் கொண்டு வாழுவதை அனுமதிப்பதில்லை. எனவே சீக்கிய நண்பர்களின் உறவு தமிழ் மக்களுக்கு மதிப்பளிக்கும் ஓர் உறவாகும். என்றேனும் ஒரு நாள் தமிழ் சீக்கிய பண்பாடுகள் இணைந்தியங்கிட வகை காண்போம்.

சீக்கிய மக்களது வீரம் போற்றற்குரியது. நாட்டின் எல்லையிலே அவர்கள் வீரத்தோடு எதிர்த்து நின்றிரா விட்டால் என்ன நிகழ்ந்திருக்கும் என்று எண்ணவே இயலவில்லை. சீக்கியரது வரலாறு புகழுடையதாக இருந்திருப்பின் அவர்

களது வருங்காலமும் மேலும் சிறந்த புகழுடன் இருக்கும்.

தமிழக அரசு அவர்களுக்கு ஏதேனும் உதவியாக இருக்க முடியுமென்ருல் அதைச் செய்திட நான் தயங்க மட்டேன். சீக்கிய சமயத்தின் மீது எனக்குள்ள உயர்மதிப்பே இதற்குக் காரணம்!

அமிர்தசரஸ் கோயிலின் மாடங்களிலே உள்ள ஓவியங்களைப் பார்த்திருக்கிறேன். சீக்கிய சமூகமானது எத்தனை துன்பங்களைத் தாங்கி இன்னல்களைக் கடந்து வந்துள்ளது என்பவற்றையெல்லாம் அந்த ஓவியங்கள் சித்தரிக்கின்றன. அயரா உழைப்பின் மூலம் அவர்கள் இன்றைய மேம்பாடான நிலையை அடைந்தார்கள். தற்காலத் தமிழ் மக்களும் சீக்கியரைப் போன்ற நல்ல பண்புகளைப் பெற வேண்டுமென நான் விழைகிறேன்.

## தமிழர் சமயம்

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பதே பண்டைத் தமிழ் மக்களின் சமய நெறியாக இருந்தது. சாத்திரச் சடங்குகள் அங்கிருக்கவில்லை. மூடப்பழக்க வழக்கங்கள் இருந்ததில்லை. சீக்கியர் நெறியைப் போலவே தமிழர் நெறியிலும் விக்கிரகங்களுக்கு இடமில்லாதிருந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இங்கே வந்ததாகக் கற்பனை செய்து பார்த்தால் இங்கே இருந்த சமயமும் ஒன்ருகவே இருப்பதை அறிவோம்.

கடவுள் பக்தி இல்லாத என்னை இங்கு அனுமதித்தது பற்றி இங்கு நாளை எவரேனும் கேட்கக்கூடும். மனிதன் மற்றெல்லாவற்றுக்கும் முதன்மையானவனுகவும் கடவுளைத் தவிர வேறு எவருக்கும் மனிதன் அடிமையாகிடத் தேவையில்லையென்றும் சமயம் கூறுமானுல் நான் நூற்றுக்கு நூறு சமயவாதியே; இதைவிட்டு தனி மனிதருக்குள் கீழ்சாதி மேல் சாதி என்று ஏற்றத்தாழ்வுகளைக் கற்பிக்கக்கூடியதாக சமயம் இருக்குமானுல் அது நடவாது.

மனிதனைப் பாகுபாடு செய்திடுவதே கடவுள் நெறி என்று எவரேனும் சொல்லுவார்களானால் நான் நாத்திகனே என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். சமய நெறி என்பது புனிதமானது, உண்மையானது, மனிதாபிமானமுள்ளது. அடக்க உணர்வை சோதிப்பது என்றால் என்னை சமயத்துக்கு அப்பாற்பட்டவனென்று எவரும் சொல்லிவிட இயலாது. என்னை நாத்திகனென்று கூறுவார்க்கு நான் கூறவிரும்புவது இதுதான்.

இந்தியா ஒன்றுபட்டிருக்க வேண்டும். அதன் வலிவு வெல்லற்கரியதாக இருக்கவேண்டும் என்று நாமெல்லாம் விரும்புகின்றோம். இந்த ஒற்றுமையை ஏற்படுத்துவதைப் படி. சட்டத்தின் மூலமோ, கட்டளையின் மூலமோ, குடியரசுத் தலைவரின் உத்தரவின் மூலமோ ஒற்றுமையை ஏற்படுத்திட முடியாது. ஒற்றுமை என்பது உள்ளம் சம்பந்தப்பட்ட ஒன்றாகும். நமது எண்ணங்கள் ஒன்றிணைந்திட செயல்பட வேண்டும். வெறும் உதட்டளவுப் பேச்சினால் ஒற்றுமை வந்துவிடாது.

ஒற்றுமையை வளரும் பசுஞ்செடிக்கு நிகராகக் கருதி ஒரு சீராகத் தண்ணீர்விட்டுப் பேணி வந்தால் மட்டுமே அது வளரும். அதைவிட்டுத் தண்ணீரும் வெந்நீரும் மாற்றி மாற்றி ஊற்றினால் செடியின் நிலை என்னவாகும்? தமிழக அரசு கொண்டுள்ள மொழிக் கொள்கையை சென்னைவாழ் சீக்கியர் ஆதரிப்பதாக உள்ளது-சங்கத் துணைத்தலைவர் குறிப்பிட்டார். அது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். இங்கே தமிழ் நாட்டில் பொதுவாகவே ஒரு தப்பெண்ணம் நிலவுகிறது. வடக்கேயிருந்து வருகிறவர்களெல்லாம் இந்தி தனியொரு ஆட்சி மொழியாவதை ஆதரிப்பவர்கள் என்ற எண்ணமே. அது சரியல்ல—சீக்கிய மக்கள் தங்கள் குர்முகி மொழியை எந்த அளவு நேசிக்கிறார்கள் என்பதையும் அறிவேன்—அதேபோல அசாம் மொழி எப்படி அசாமியர்களால் நேசிக்கப்படுகிறதென்பதையும் அறிவேன்.

# புரட்சிக் கனல்

**பெ**ரியார் அவர்கள் செல்வக் குடியில் பிறந்தவராளு லும், தமக்குள்ள சுக போகங்களையெல்லாம் உதறித்தள்ளி விட்டு, இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், இந்த நாட்டு மக்களின் நலிவினைப் போக்கி, அவர்களின் நல்வாழ் விற்காகவும் தன்னை ஒப்படைத்தவராவார்.

அவர் இந்த நாட்டுக்கு ஆற்றிய தொண்டு இங்கே ஏற் படுத்திய புரட்சிக்கனல்—அறிவுப்புனல், எவரும் எங்கும் காணுத ஒன்றாகும். அவர் ஏற்படுத்திய பகுத்தறிவுப் புரட்சியை நாம் வேறு எங்கும் கண்டதில்லை.

அவர் பல போராட்டங்களை வென்றவர். எதிர்த்து வரும் எதிர்ப்புக்கு மூலபலம் எங்கே இருக்கிறது என்று தெரிந்து அதனைத் தாக்குவது தான் அவருடைய போர் முறையாகும்.

1935—37-ல் அவர் தொடுத்த போராட்டத்தின் விளை வால் தான் ஆட்சி மொழி என்று சொல்லி வந்த இந்தி மொழியை இணைப்பு மொழி என்றழைக்க ஆரம்பித்தார்கள்.

இந்தி ஆட்சி மொழி என்று அவர்கள் சொன்ன நேரத் தில், ஆட்சிமொழி இருக்கட்டும், உன் ஆட்சியின் லட்சண மென்ன என்று துணிவோடு கேட்டதை நாமறிவோம். தேசியமொழி என்ற தகுதியிலிருந்து மாறி, இந்தி இணைப்பு மொழி என்று அவர்கள் கூறுகின்ற நிலைமைக்கு இறங்கி வந்ததற்கு காரணம் பெரியார் எடுத்துக் கொண்ட போராட்டம் தான்.

அதை மறுப்பவர்கள் தமிழராக இருக்க முடியாது. காட்டு மிராண்டித்தனமான கொள்கைகளை விட்டு விட்டு, மனிதன் மிருகத்தனத்திலிருந்து நீக்கப்பட்டு, பகுத்தறிவுள்ள

வஞக, பண்பாளஞக மாறவேண்டும் 'என்று அறிவுப் பிரச்சாரம் செய்தவர்.

எந்த நாட்டிலும், இரண்டு நூற்ருண்டுகளில் செய்து முடிக்கவேண்டிய காரியங்களை 20 ஆண்டுகளில் செய்து முடிக்க வேண்டும் எனக் கருதி திட்டமிட்டு செய்து முடிப்பார்.

நான் கல்லூரியை விட்டு வந்த காலத்தில் எங்கெங்கோ சிக்க வேண்டியவன். அங்கெல்லாம் சிக்காமல் பெரியாரிடம் தான் சிக்கிக் கொண்டேன். இப்பொழுது 'கிடைக்கும் பெருமையும் மகிழ்ச்சியும் இனி கிடைக்கப் போகும் பெருமையும் மகிழ்ச்சியும் இதற்கு முன்பெற்ற பெருமையையும் மகிழ்ச்சியையும் விட அதிகமாக இருக்க முடியாது.

நீதிக்கட்சி அழிந்து போகும் நிலைமையில் இருந்த சமயம் அந்த நீதிக் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்று, அந்த நீதிக்கட்சி என்ற யந்திரத்திற்கு சுயமரியாதை இயக்கம் என்ற என்ஜினைப் பூட்டி இயக்க ஆரம்பித்தார்.

திருச்சியில் நடைபெற்ற தி. க. மாநாட்டில், முதல் நாள் பெய்த பெருமழையால் மாநாட்டுப் பந்தல் பூராவும் தண்ணீர் தேங்கி நின்றது. மறு நாள் மாநாடு நடக்குமா என்று எண்ணிக் கொண்டிருந்தோம். பெரியார் எடுத்துக் கொண்ட துணிவான முயற்சியால் இரவோடு இரவாக தண்ணீரை யெல்லாம் வெளியேற்றி, அங்குள்ள சேற்றையெல்லாம் அப்புறப்படுத்தி, குறித்த காலத்தில் மாநாடு நடைபெற்று முடிந்தது. இதனை ஏன் சொல்கிறேன் என்ருல் மாநாட்டிலிருந்த சேற்றை மட்டுமல்ல தமிழகத்தின் மக்களின் நெஞ்சிலே ஊறிப்போன சேற்றை களைந்தெறிந்து பகுத்தறிவு நல்லுணர்வு ஊட்டியவர் என்பதனைக் கூறிடத்தான்.

அவரைப் பார்த்து பல்லோரும் பல சமயங்களிலும் கேட்டது என் நினைவுக்கு வருகிறது. ''நீங்கள் பேசும் பகுதிகளில் ஆயிரத்தில் ஒன்று பேசிஞலும், எங்களை தடுத்து விடு

கிறார்கள். நீங்கள் மட்டும் எப்படி அவ்வளவு துணிவாகப் பேசுகிறீர்கள்?'' என்று கேட்பார்கள். ஆகவே தான் கூறுகிறேன், இந்த நாட்டில் அவர் சாதித்த சாதனை மிகப் பெரியது.

அவர் அழைத்தால் வாராத தமிழ் மக்களில்லை. அவர் கூப்பிட்ட குரலுக்கு வாராத இளைஞர்களில்லை. இன்று பெரியார் அவர்களின் முகத்திலே தெரிகின்ற உற்சாகமும், கனிவும் நமக்கெல்லாம் ஏற்பட்டிருக்கின்ற எழுச்சியும் வாழ்க்கையிலே என்றோ ஒரு நாள் தான் வரும்.

அவர் பல்லாண்டு வாழ வேண்டும். நாம் அவரை மறக்கின்ற நேரத்தில் நமக்கு ஒரு தளர்ச்சி ஏற்படுவதையும் அவரை நினைக்கின்ற நேரத்தில் ஏதோ ஒரு ஊக்கம் பிறப்பதையும் காண்கிறோம். அவரை நினைக்காத வணிகப் பெருமக்களில்லை ; தமிழ்ப் புலவர்களில்லை.

## அனைவரும் அவரது பிள்ளைகள்

அவருடைய பிள்ளைகள் எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறார்கள்.

அப்படி இருக்கின்ற பிள்ளைகளில் எந்தப் பிள்ளையும் சோடையில்லை.

30 வருடங்களுக்கு முன் பேசப் பயந்தவைகளை இன்று 8 வயதுச் சிறுவன் பேசிடவும் 20 வருடத்திற்கு முன் பயத்தை மூட்டி வந்தவைகள் இன்று கேலிக்குரியவைகளாக மாறியதற்கும் பெரியார் காரணமாவார்.

இதற்கெல்லாம் அடிப்படை அமைத்திட-பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. இன்று போல் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரித்து மாலைகள் போட்டு வரவேற்பதில்லை. அன்றெல்லாம் செருப்புத் தோரணங்களைக் கட்டியால்லவா எதிர்ப்புக்காட்டினார்கள்? அதையெல்லாம் தாங்கிக் கொள்கின்ற மனப்பக்குவம் பெற்றதினால் தான் இன்றைக்கு ஒரு மறுமலர்ச்சியைக் காணமுடிகிறது.

# தமிழுக்குத் தொண்டாற்றியவர்

பல்லாண்டு காலமாகப் பன்மொழிப்புலவரிடம் நெருங்கிப் பழகியவன் என்ற வகையிலும்—அவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டை அறிந்தவன் என்ற முறையிலும் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஆசிரியராக இருந்து பணியாற்றிய காலத்தில் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்ட வரையில் இன்றைய தினம் அவர் தமிழுக்குத் தொண்டாற்றுகின்ற பலவழிகளையும் அறிந்து பாராட்டுகிறேன்.

மற்ற நாடுகளில் அறிவாளர்கள் ஒன்று சொன்னால் அதை அங்கே ஏற்றுக்கொள்வதற்கு ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொள்வார்கள். ஆனால் நமது நாட்டைப் பொறுத்தவரை ஒருவரை அறிவாளியென்று சொன்னால் ''என்ன அறிவு'' பெரிய அறிவு என்று தன் அறிவைக் காட்டுபவர்கள் இருக்கிறார்கள். வெளிநாடுகளைப் போல் எழுத்துத் துறை—பேச்சுத் துறை—வேறு எந்தத்துறையானாலும் உற்சாகமாக ஈடுபடுவது மிகக் கடினம்.

இத்தகைய கடினமான தொண்டை முப்பது முப்பத்தைந்து ஆண்டுகட்கு முன்பிருந்தே அப்பாதுரையார் அவர்கள் தொடங்கி பணியாற்றி வருகிறார்கள்.

அவர் வாழ்க்கை பூஞ்சோலையல்ல—வறுமைச் சூழலிலே தன் குடும்பச் சூழலை அமைத்துக் கொண்டிருப்பவர். அவர் நினைத்திருந்தால் பல்கலைக் கழகத் துணைவேந்தராகும் அளவுக்கு இன்று தன்னை உயர்த்தியிருக்கக் கூடும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. எந்தெந்த விதங்களில்—

தமிழுக்குத் தொண்டாற்றலாம்-எந்தெந்த வழிகளில் தமிழ் நாட்டுக்குப் பணியாற்றலாம் என்று எண்ணி அந்தந்த நேரங்களில் அருந்தொண்டாற்றியவர்.

இசைக் கச்சேரியில் பலவிதமான இசைவகைகளை ஏற்ற இறக்கத்துடன் பாடினாலும் சுதிக்குள்ளே நின்று பாடுவது போல தமிழ்த் தொண்டுக்குள் நின்று பல துறைகளில் தொண்டாற்றியவர்.

மேல் நாடுகளில் ஒருவர் ஒரு புத்தகம் எழுதினால் அந்த ஒரு புத்தகத்தில் வரும் வருவாயைக் கொண்டே தன் வாழ் நாளைச் செப்பனிடும் அளவுக்கு வசதியிருக்கிறது.

ஒருவர் எழுதிய புத்தகத்தின் வருவாயைச் செலவழிப் பதற்காக அதுவும் ஓராண்டு காலம் ஓய்விலிருந்து அதைச் செலவழிப்பதற்காகத் தென்னமரிக்காவில் சென்று வாழ்ந் தாராம்.

இங்கு ஒருவர் ஒரு புத்தகம் வெளியிட்டால் உடனே வேறு வீட்டிற்குக் குடிபுக வேண்டியதிருக்கிறது, கடன் தொல்லைக்காக!

பன்மொழிப் புலவருக்கு மணிவிழா கொண்டாடுகிறோம் —ஆனால் அவரது கருத்துக்கள் நம்மிடம் இருக்கிறதா என் றால் இல்லை. திரு. வி. கவைப் பற்றிய—மறைமலையடிகளா ரைப் பற்றிய குறிப்புக்கள் இல்லை. அவர்களது குறிப்புக் களை மறந்துவிட்டால் மரபு என்பது கிடைக்காது. மரபு என்பது தமிழகத்தைப் பொறுத்தவரை மறதியென்று ஆகி விட்டது. மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் நம்மிடமில்லை.

ஏதேனும் ஒரு புத்தகத்தில் கரிகாலனைப் பற்றியே செய்தி வருகிற இடத்தில் ஒரு நட்சத்திரக் குறியிட்டிருப்பார்கள்.

அதற்கு விளக்கம் கடைசிப் பக்கத்தில் இருக்கும். அதுவும் காரிகாலன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான் என்று சொல்வாரும் உண்டு—கருவூரைத் தலைநகராக்கினன் என்று இயம்புவாரும் உண்டு என்று எழுதியிருக்கும்.

இப்படிப்பட்டவற்றையெல்லாம் நீக்கி வரலாற்று ஆசிரியர்களை உள்ளடக்கி கல்வெட்டு மூலமாகவும்—ஏடுகள் மூலமாகவும் உள்ள கருத்துக்களை ஒன்று திரட்டி வரலாற்றை உருவாக்கி தமிழ் நாட்டாருக்கு வழங்கவேண்டும். வெளி நாட்டுக்காரர்கள் யாராவது கேட்டால் இதோ எங்கள் தமிழக வரலாறு என்று கொடுக்க நம்மால் முடியாது.

இங்கிலாந்து நாட்டில் இதேபோல் ஒரு மாநாடு நடந்தால் இதோ எங்கள் வரலாறு என்று காட்ட அவர்களால் முடியும். ஜெர்மன் நாட்டிலே நடந்தால் அவர்களால் காட்ட முடியும். அப்படிப்பட்ட வரலாற்றை நாமும் காட்ட அப்பாதுரையார் போன்றவர்களை வைத்துச் செயல்பட வேண்டும்.

இன்று இந்தி எதிர்ப்பு என்பது எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று. இன்று இந்தி எதிர்ப்பில் தீவிரம் காட்டுவது போலவே அன்றும் தீவிரமாக ஈடுபட்டவர் அலமேலு அம்மையார் ஆவார்கள்.

இந்தி எதிர்ப்பு மறியலைத் தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் பள்ளிக்கூடத்திற்கு எதிரில், நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க மறியலில் ஈடுபட்ட தியாகி யென்று அலமேலு அம்மையாரைக் குறிப்பிட்டால் மிகையாகாது.

எவ்வளவு அலைவீசினாலும் மேல் தளத்திலே நிற்கும் கப்பல் தலைவன் போல அவர் கொளுத்தும் வெயிலையும் பாராது எரிக்கும் சூட்டிலே நின்றுகொண்டிருந்தார். அப்படிப் பட்ட அவர்கள் இன்னும் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து தமிழுக்கும்—தமிழ்நாட்டுக்கும் தொண்டாற்ற வேண்டும்.

# அழுத்தக்கார மனிதர்

பக்தவத்சலனார் அவர்கள் இந்திய அரசியலிலும் குறிப்பாகத் தமிழக அரசியலிலும் தம்முடைய வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவர். நாட்டில் 50 வருட வரலாற்றில் அவர்கள் இடம் பெற்று இருக்கிறார்கள். அவருடைய தனிப்பட்ட பண்பைப் பாராட்டுவதைவிட அவர் வாழ்ந்த காலத்தில் உள்ள நிலைமையைப் பாராட்டினால் அவரை நாம் உணர்ந்து இருக்கிறோம் என்று பொருள்.

அவரோடு ஒத்த கருத்துள்ளவர்கள் பாராட்டுவதைவிட ஒத்துக் கொள்ளாதவர்கள் பாராட்டுவதுதான் ஜனநாயகத்தின் சிறப்பு ஆகும்.

அவர் ஒரு கட்சியை சேர்ந்தவர். நான் ஒரு கட்சியைச் சேர்ந்தவன். இருவரும் தனித்தனி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும் பெரியார் காங்கிரசிலிருந்து பிரிந்தார். பெரியாரிடமிருந்து நாங்கள் பிரிந்தோம். காங்கிரசில் இருந்து பிரிந்த இயக்கம்தான் மற்ற இயக்கங்கள்; மூலத்தில் எல்லோரும் ஒன்றுதான்.

பழைய காலத்தை நினைவு படுத்தக்கூடிய பெரியவர்களில் ஒருவராக நம்மிடம் பக்தவத்சலம் இருக்கிறார் என்பது பெருமைக்குரியது ஆகும்.

அப்படிப்பட்ட பெரியவர்கள் என்று ராஜாஜி-பெரியார் – காமராஜர், பக்தவத்சலம் போன்றவர்களைக் குறிப்பிடலாம். அவர்கள் மறைந்தால் பல விஷயங்கள் வெளியே வராமலே போய்விடும். இவர்கள் எல்லோருக்கும் தமிழ் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை இருப்பது பாராட்டுக்குரியது ஆகும். இந்தப் பெரியவர்கள் எல்லாம் இன்னும் பல ஆண்டுகள் நம்மிடத்திலே இருந்து பல நல்ல கருத்துக்

களை சொல்லி தமிழ் நாட்டின் எதிர்காலத்தை உருவாக்க உதவ வேண்டும். பக்தவத்சலம் அவர்களுடைய குடும்பம் நிலச்சுவான்தார் குடும்பம்.

சமுதாயத்தில் உயர்ந்த வகுப்பு என்று ஒப்புக்கொள்ளப் பட்டவகுப்பைச் சேர்ந்தவராக இருந்தார். மேட்டுக்குடியில் பிறந்தவர் என்றாலும் அவருடைய முன்னோர்கள் தேசியத் தில் பற்றுள்ளவர்களாக இருந்தார்கள் என்று கேள்விப்பட்டு இருக்கிறேன்.

எங்கள் ஊருக்கு பக்தவத்சலம் அவர்கள் தன்னுடைய தந்தையோடு வரும்போது தான் பார்த்து இருக்கிறேன். அப்போதெல்லாம் வெகு அடக்கத்தோடு வருவார். எனக்கும் அவருக்கும் பத்தாண்டு காலமாக நெருங்கிய தொடர்பு உண்டு. ஆனால் பத்திரிகையில் வரும் விஷயங் களைப் பார்த்து எடைபோடுகிறார்களே தவிர எங்களுக்குள்ள நட்பைச் சிலர் புரிந்து கொண்டது இல்லை. சட்டமன்றத் தில் பணியாற்றியபோது நான் கூறிய பலவற்றை அவர் மறுத்திருக்கிறார். அவர் கூறியவற்றை நான் மறுத்து இருக்கிறேன்.

எந்த பண்டத்தை எடுத்தாலும் தூற்றி நல்லதை எடுக் கிறார்கள்.

நாம் கூட தூற்றுகிறோம். மாலை நேரத்தில் ஒருவரை ஒருவர் தூற்றிக் கொள்கிற நேரத்தில் தேவையற்றதை தள்ளிவிட்டு நல்லதை எடுத்துக்கொள்ள முயற்சித்தால் பலன் உள்ளதாக இருக்கும்.

யார் மீதும் எனக்கு எந்த நேரத்திலும் வெறுப்பு இருந் தது இல்லை.

## பகை உணர்ச்சி கூடாது

அவரவர்கள் தங்கள் கொள்கைகளை வலியுறுத்துவதில் ஈடுபட்டாலும் அதிலே பகை உணர்ச்சி தேவை இல்லை.

பக்தவத்சலம் சட்டமன்றத்தில் இருந்த காலத்திலேயே எங்களோடு இருந்த காலத்தில்தான் அதிகமாக மகிழ்ச்சி அடைந்து இருக்கிறார். அவருக்குள்ள பெரியகுணம் அவர் ரொம்ப அழுத்தக்காரர் என்று சொல்வார்கள். சட்டமன்றத்தில் நாங்கள் மணிக்கணக்கில் பேசுவோம். அதிலே சில இடங்களில் கோபத்தை வெளிப்படுத்துவோம். வேண்டுகோளைத் தெரிவிப்போம். எல்லாம் முடிந்த பிறகு பக்தவத்சலம் அவர்கள் என் நண்பர்கள் சொல்லியன ஏற்றுக் கொள்வதற்கு இல்லை என்று ஒரு வரியில் சொல்லி விடுவார். அப்போதும் அவர் கசப்பு உணர்ச்சியை காட்டியது இல்லை.

மேடையில் நாங்கள் இருவரும் பேசிக்கொண்டு இருந்த பொழுது கைதட்டலும் சிரிப்பொலியும் எழுந்தது. எதையோ காணக்கூடாத காட்சியை கண்டதுபோல ஜனநாயகத்தில் பல கட்சிகள் இருக்கும். இருக்கவேண்டும்.

சர்ச்சில் பிரதமராக இருந்து ஒருமுறை தேர்தலில் தோற்றபோது அட்லி பிரதமராக வந்தார். வழக்கப்படி பிரதமர் பத்தாம் எண்ணுள்ள வீட்டுக்கு குடிபோனபோது பழைய பிரதமர் சர்ச்சிலின் மனைவி அந்த வீட்டின் அமைப்புகளை எது எது எங்கு இருக்கும் என்று விளக்கிக் கூறுகிறார். அந்த மனப்பான்மை நமக்கு வராது என்று கருதினால் நாம் ஜனநாயகத்திற்கு லாயக்கில்லாதவர்கள் என்றாகிவிடும்.

அட்லியும்—சர்ச்சிலும் ஒரே மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றபொழுது மற்றவர்களுக்கு விவாதத்துக்கு உரியதாக இருந்தது. இருவரும் செல்வதை முறியடிக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் தடுக்கப்பட்டு இருவருமே அந்த மாநாட்டில் கலந்துகொண்டார்கள். ஜனநாயகத்தில் அந்த நாடு எவ்வளவு சிறந்து இருக்கிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

இதுபோன்ற விழா மட்டுமல்லாமல் பொதுவாக முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

கருத்து வேறுபாடுகள் இருப்பினும் ஒருவரை ஒருவர் மதிக்கும் ஜனநாயகப் பண்பு வளர்வதற்கு காங்கிரஸ் தலைவர்கள் உதவ வேண்டும்.

சைவர்களும்—வைணவர்களும் சண்டையிட்டுக் கொண்ட நிலைபோய் இப்போது இருவரும் ஒரே வீட்டில் கூடி இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட உணர்வை உருவாக்க முன்நிற்க வேண்டும். பக்தவத்சலம் தம்முடைய கட்சிக்கு மட்டும் அல்லாமல் எல்லாக் கட்சிக்கும் கருத்துக் கூறும் ஆற்றல் பெற்றவராவார்.

பைபிளைப் படித்து விடுவதாலே நாம் கிறிஸ்தவர்களாகி விடுவது இல்லை. காங்கிரஸ் தலைவர்களாக இருப்பவர்கள் தான் காங்கிரஸ் வரலாற்றை படிக்கவேண்டும் என்பதில்லை. எனக்குத் தெரிந்த வரை காங்கிரசிலே இருப்பவர்களை விட நாங்கள் அதிகமாக அறிந்து இருக்கிறோம். ஏன் என்றால் எந்த இடத்தில் ஓட்டை இருக்கிறது என்பது அப்போது தான் தெரியும்.

நான் பொறுப்பு ஏற்றதும் தனித் தனியாக டைரி எழுத ஆரம்பித்தேன். இப்போது ஒரு டைரிதான் மிஞ்சி இருக்கிறது. ஐந்து டைரி எங்கே என்று தெரியவில்லை. டைரி எழுதி எனக்குப் பழக்கம் இல்லை. அந்தப் பழக்கம் இல்லாததால் தான் தமிழ்நாட்டின் முழு வரலாறு நமக்கு கிடைக்கவில்லை. திருவள்ளுவர் எந்த ஊர் என்று இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை.

டாக்டர் வரதராஜலு—திரு. வி. க. போன்றவர்கள் வரலாறு சரியாக எழுதப்படவில்லை. பக்தவத்சலம் அவர்களின் நாற்பது-ஐம்பது வருட காலமாக தொடர்பு கொண்டிருந்த அரசியல் வரலாற்றை உருவாக்கினால் படிப்பகத்திற்கு சிறந்த நூல் கிடைக்கும்.

# எதிர் நீச்சலடித்த இரட்டையர்

**பெ**ருந்தன்மையோடு கூடிய பொதுவாழ்வு வெற்றியை யன்றி வேறெதையும் தந்திடாது.

அறிவுத் தெளிவுக்கும் வாழ்க்கைப் பணியில் உறுதிக்கும் இவ்விரட்டையர் முன் உதாரணமாகத் திகழ்கின்றனர்.

இவ்விரட்டையரது அறிவாழம் மிக்க புலமையிலும் இவர்களது தருக்க நியதிகளிலும் ஐயப்பாடு என்பது எவருக்குமிருக்காது. இவ்வாறிருப்பினும் அனைவரும் இவர்களைப் பின்பற்றுவதில்லை.

ஆற்றில் எதிர்நீச்சலடித்து சுழல்தனைச் சந்தித்து மேல் நோக்கிச் சென்றுள்ள இவர்கள் அவ்வாறு செய்தது வீர பிரதாபங்களுக்காக அல்ல. அறிவுத் தெளிவோடு தாங்கள் கொண்ட கொள்கைகளில் உறுதியோடு தாங்கள் தேர்ந் தெடுத்துக் கொண்டுள்ள பாதையில் அவர்கள் திடமாகவே சென்றுள்ளனர். எனினும் அவர்கள் வெற்றியையே தழுவி இருக்கிறார்கள்.

ஆற்காடு சகோதரர்கள் என்றழைக்கப்படும் இரட்டை யர் தமிழகம் தந்த உரம் மிகுந்த வல்லவர்கள். இந்தியாவின் மேதைகள்—உலகறிந்த சான்றோர்-இந்த நூற்றாண்டின் உலக மேதைகளுள் சிலராக மதிக்கப்படுவர்.

இவ்வுலகிலே பெரிய மனிதர் என்ற பெயரெடுக்கத் தாம் கொண்ட கொள்கைகளிலிருந்து விலகிடுபவர் உண்டு. ஆனால் சர். ராமசாமியோ ஓராயிரம் களம் கண்டவர்.

டாக்டர் லட்சுமணசாமி மருத்துவத்திலும், கல்வியிலும் சிறந்தவர். மருத்துவம் மனித உடலைப் பாதுகாக்க – கல்வி மனித மனத்தைப் பாதுகாக்க என்ற வகையில் அவரது பணி பயன்பட்டு வருகிறது. உறுதியான உடலில் தூய்மையான தொரு மனம்- இந்த அவசியத்தை பல்லாயிரவர் உள்ளங்களில் பதிய வைத்தவர் அவர்.

அரசியற் புயலில் அவர் சிக்கிக் கொள்ளவில்லை யென்றாலும் தூரத்தே நின்று அரசியலைக் கவனித்து அதை அமைதிப்படுத்துவதில் அவர் ஈடுபட்டார்.

இவ்விரட்டையர் தங்கள் அலுவல் யாவிலும் கடைப்பிடித்த பண்பாடும் நாகரிகமும் தனிச் சிறப்பானவை.

அந் நாட்களில் நடந்த அரசியல் விவாதங்கள் மிக நேர்த்தியானவை. பிரச்சினைகளும்–சாதனைகளுமே விவாதிக்கப்படும். அந்த விவாதத்துக்கப்பால் தோழமை உணர்வே அங்கு மிகுந்திருக்கும்.

இந்நாட்களில் அத்தகைய விவாதங்கள் நிகழ்த்தப்படுகின்றனவா? பிரச்சினைகளைப் பற்றிப் பேச எழுகின்ற நாமே பிரச்சினைகளாக மாறி விடுகிறோம். அந்த அளவுக்கு நாம் குன்றி விட்டோம்.

இத்துணைக் கண்டம் அதன் ஜனநாயக வாழ்வின் இருபதாம் வயதினைக் கடந்து கொண்டிருக்கிறது. சர். ராமசாமி போன்ற பெரியவர்கள் இந்த ஜனநாயக வாழ்வை முறைப்படுத்திட முன் வந்தால்தான் ஜனநாயகம் தழைத்தோங்கும். இல்லையேல் அழிவுப் பாதையை நோக்கி இட்டுச் செல்வதாகவே இருக்கும்.

ஜனநாயகம் என்பதால் சாதாரணத் திறமையுடையவர்கள் அரசியலை வழி நடத்திச் சென்றால் போதுமென்று எண்ணுவதோ சொல்லுவதோ கூடாது. உரம் மிக்க வல்லவர்கள் தேவை. வழி நடத்தும் ஆற்றல் உள்ளவர்கள் தேவை. எனவே 81 வயதிலும் வலிமையுள்ளவர்களாக 81

வயதாகியும்உடல் உறுதியோடு-81 வயதில் 50 ஆண்டைய செறிந்த அனுபவங்களையும் கொண்ட இவ்விரட்டையரது வழிகாட்டுதல் நமக்குத் தேவை. வருங்காலத் தலைமுறையினரது நன்மை கருதி தங்களது செறிந்த அனுபவங்களை அவர்கள் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் சுயசரிதையை இவர்கள் இருவரும் எழுதிட வேண்டுகின்றேன். அப்படி எழுதப்பட்டால் அது இவ்விருவரது வாழ்க்கையைப் பற்றியதாக மட்டுமிராது. இவர்கள் வாழ்ந்த காலத்தைப் படம்பிடித்துக் காட்டிடும் உன்னதமானப் புகழ்மிக்க அத்தியாயமாக அது விளங்கும்.

''நான் எடுத்துக் கூறும் கொள்கையில் எனக்கு நம்பிக்கை உண்டு. இதில் மற்றவர்களும் நம்பிக்கை வைக்கும் காலம் வரும்வரை நான் காத்திருக்கத் தயார். அந்தக் காலம் வரும்வரை விளைவுகளையும் ஏற்கத் தயார்'' என்று கென்னடி கூறியதுபோல அதே உறுதியுடன் சர். ராமசாமி விளங்கி வருகிறார்.

ஆங்கிலக் கல்வியின் அவசியம் பற்றிய அவரது கருத்துக்களை இப்போது இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும், ஏற்றுக் கொள்கிறார்கள். ஆங்கிலத்தின் இடத்தில் இந்தி இத்தனை அவசரக் கோலத்தில் திணிக்கப்படுவது கூடாதென்று அவர்கள் சொல்கிறார்கள்.

இவ்விரட்டையரது வாழ்வு மகத்தானது. மகோன்னதமானது. சூட்டினை ஏற்படுத்தாது. ஆனால் ஒளியினை உமிழும்.

இவர்களது சேவை இன்னும் நாட்டுக்குத் தேவை. சந்தைச் சதுக்கத்தில் வந்து நின்றுதான் மக்களை இவர்கள் வழிநடத்த வேண்டுமென்பதில்லை.

தாங்கள் இருக்குமிடத்துப் பலகணியில் நின்றபடியே இவர்களால் மக்களுக்கு வழி காட்டிட முடியும்.

இவர்கள் நிறை வாழ்வு வாழ்வார்களாக.

# இனிய மனிதர்

**கா**ஞ்சி மணிமொழியாருக்கு 60 வயதாகிவிட்டது' என்று நண்பர்கள் கூறியபோது இவ்வளவு வயதாகிவிட்டதா என்று மலைத்துப்போய் விடுவோம். காரணம் அத்தகைய இளமைத் தோற்றத்துடன் இருப்பவர்.

இதுவரை நாட்டுக்கு அவர் எந்தவிதமான தொண்டாற்றினாரோ அதே தொண்டைத் தொடர்ந்து ஆற்றி——எந்தவிதமான இலட்சிய நாட்டைக் காணவேண்டும் என்று கனவு கண்டாரோ—அதைக் காணும்வரை இடைவிடாது பாடுபட வேண்டும் என்று அவரை வேண்டுவதுதான் நாம் அவருக்கு தெரிவிக்கும் பாராட்டு! அதைத்தான் அவர் எதிர்ப்பார்ப்பார்.

இத்தனை வயதாகிவிட்ட பிறகு நம்மிடம் அவர் எதிர்பார்ப்பது எதுவும் இருக்காது. ஏனெனில் இளமையிலேயே அவர் எதிர்பார்க்கவில்லை. கழகம் எந்தவிதமான கட்டளையிட்டாலும் அதை நிறைவேற்றியவர் மணிமொழியார். தடியடி படுவதுதான் தமிழ் காக்கும் முறை என்றால்-தடியடிபடத் தயாரானார்! சிறை செல்வது தான் செந்தமிழ் காக்கும் வழி என்றால் சிறை செல்லத் தயாரானார்! காடு மேடு சுற்றிப் பிரச்சாரம் செய்வதுதான் தமிழின் பெருமையை உணரச் செய்யும் வழி என்றால் அப்படிக் கடுமையான பிரச்சாரத்தைச் செய்யத் தயாரானார். ஏடுகளை வெளியிடுவது தான் இன்தமிழை வளர்க்கும் பணி என்றால்——அவர் ஏடுகளை நடத்தியிருக்கிறார்; இதழ்களை வெளியிட்டியிருக்கிறார். மாநாடுகளைக் கூட்டியிருக்கிறார்-தமிழ் ஆர்வத்தைக் காட்டியிருக்கிறார்.

இப்படிப்பட்டவர்களால் தான் மிகச் சாதாரண மானவர்களால் துவக்கப்பட்ட தி. மு. கழகம் அரசாளும் பொறுப்பேற்றிருக்கிறது.

முஸ்லிம் பெருங் கவிஞர் இக்பால் ஒரு கவிதை மூலம் கூறினார்.

சிட்டுக் குருவிகள் வல்லூறைப் போல் கொத்தும் திற னற்றவை. கூர்மையான நகமற்றவை; வல்லூறை விட பலத்தில் குறைந்தது.

ஆனால் ஒருகாலம் வரும்; சிட்டுக்குருவிகள் வல்லூறை வெல்லும் காலம் வரும்! பாமர மக்கள் பாராளும் காலம் வரும்!

—என 25 ஆண்டுகளுக்கு முன்னரே அவர் பாடினார்.

சிட்டுக்குருவிகள் வல்லூறை வென்றதுபோல் பாமரர் கள் இப்போது பாராள்கிறார்கள்.

சிட்டுக்குருவிகள் வல்லூறை வென்றது மட்டுமல்ல சிட்டுக்குருவிகளின் ஆட்சியை எப்படிக் கவிழ்ப்பது என்று வல்லூறுகள் யோசித்துக் கொண்டிருக்கின்றன இப்போது!

இந்தச் சிட்டுக் குருவிகளை ஆட்சிக்கு வரவிடாமல் தடுக் கும் ஆற்றலே கூட வல்லூறுக்கு இல்லாத போது—அதைக் கவிழ்ப்பது எப்படி?

கவிழ்ப்பேன் எனப் பேசுவது ஆசையின் விளைவே தவிர ஆகக் கூடிய காரியமல்ல! நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகும் நாம் சிட்டுக் குருவிகள் தான் என்பதை மறக்க வில்லை! அதை மறந்தால்—நாங்கள் கவிழ்ந்தோம்! அதை மறக்காதவரை நாங்கள் கவிழ மாட்டோம்.

மந்திரிப் பதவியில் நாங்கள் இருப்பதால் ஏதோ மகிழ்ச்சியோடிருக்கிறோம் என்று காங்கிரஸ்காரர்கள் நினைக்க வேண்டாம்!

தேர்தலுக்கு முன்பேகூட நான் கூறியிருந்தேன். ''நாங்கள் ஆட்சிப்பீடம் ஏறவேண்டும் என்பதில் எங்களுக்கு அவசரமில்லை. மக்கள் ஆணையிட்டால் வருகிறோம்; பொறுத்திரு, இன்னும் ஐந்தாண்டு காலம் என்றாலும் பொறுத்திருக்கத் தயார் என்றுதான் கூறினேன்.

ஆனால் நாட்டு மக்களுக்குத்தான் அவசரம்! ஆகாத ஆட்சியை எத்தனை நாளைக்குத் தாங்கிக் கொள்வது? இருளில் எத்தனை நாள் தவிப்பது? உதயசூரியன் ஒளி என்று கிடைக்கும்?—என்று ஏங்கிய மக்கள்தான் எங்களுக்கு ஆணையிட்டார்கள்; ஆளுகிறோம்!

முன்பு (1938-ல்) நடந்த இந்தி எதிர்ப்பு ஊர்வலங்களைப் பற்றிச் சொன்னால் உங்களுக்கே கூச்சமாக இருக்கும்.

சென்னை நகரின் மத்தியப் பகுதியில் மயிலை சிவமுத்து என்ற ஒரு பெரியவர்—அவரது தமக்கையார்—அவருக்குத் துணையாக டாக்டர் தருமாம்பாள் ஆகியோர்—இன்னும் சிலர்!

இப்படிப் பல் போன பெரியவர்கள் பத்துப்பேர். மீசை முளைக்காத எங்களைப்போன்றவர்கள் ஐந்து பேர். மீசை முளைத்த வாலிபப் பருவமுடைய மணிமொழியார் போன்றவர்கள் ஐந்து பேர், ஆக 20 பேருடன் மெல்லிய குரலில் ''இந்தி ஒழிக! இந்தி ஒழிக!'' என்று ஒலியெழுப்பிச் செல்வோம்.

'எங்கள் ஊர்வல ஒலியைக் கேட்டு, வீட்டுக்குள் இருப்பவர்கள் வெளியே வந்து பார்க்க மாட்டார்கள். ஏனென்றால்

நாங்கள் கொடுக்கும் குரல் வீட்டைக் கடந்து, வீட்டுக்கூடத் திற்குக் கூடச் செல்லாது!

அப்படி எங்களுக்குள் பேசிக்கொள்வதுபோல் இந்தி வேண்டாம் என்று குரல் கொடுப்போம்!

இந்தி ஒழிக, என்று உரத்த குரலில் கூறினல் ஆயிரம் பேர் சேர்ந்து கொண்டு ஏன் இந்தி ஒழிய வேண்டும் என்று மிரட்டினலும் மிரட்டுவார்கள்.

ஆனல் இன்றுள்ள நிலைமை வேறு; இந்தி வாழ்க—என்று கூறுவதற்கு இந்திக்காரரே கூச்சப்படுகிறர்.

# பிறந்த பொன்னாட்டை மறக்கக் கூடாது

எவரும் தான் பிறந்த மண்ணை மறப்பது கூடாது. வெங்கட்ராமனும் மறக்கமாட்டார் என்றே நம்புகிறேன். இந்த மண்ணோடுள்ள உறவு தான் நின்று நிலைத்திருக்கக் கூடியதாக இருக்கும். தமிழ் நாட்டின் தேவைகளையும், அவசியங்களையும் உணர்ந்துள்ள அவர் இதுகாறும் ஏற்பட்ட தவறுகளைச் சரி செய்து தமிழகத்துக்கு நீதி கிடைத்திடச் செய்ய வேண்டும்.

தமிழகத்தைச் சேர்ந்த நாம் கொடுத்துப் புகழெய்தியவர்கள்; வாங்கிப் பழகியவர்கள் அல்ல. நாம் கேட்பது பொருளாதார நியாயமே—அரசியல் நியாயம் கோரவில்லை.

இயற்கைக் கனிப் பொருள்கள் கிடைக்குமிடத்தில் தொழில்கள் துவக்கப்பட வேண்டுமென்ற கோட்பாடே கல்லூரிப் பொருளாதார வகுப்பில் படித்திடும் ஆரம்பப் பாடம். இந்த வகையில் தான் சேலம் உருக்காலை திட்டத்தை வலியுறுத்துகிறோம்.

ஒருவர் புகழெய்திவிடுகிறார் என்பதால் இந்த ஆரம்பப் பொருளாதாரப் பாடத்தை மறந்துவிட இயலுமா?

இதே வகையில் தான் தூத்துக்குடி ஆழ்க்கடல் துறைமுகத்திட்டம் பற்றியும் வலியுறுத்துகிறோம்.

நாட்டின் வரலாற்றில் பரபரப்பானதொரு காலம் இது. இந்தியாவின் கூட்டமைப்பு அரசியல், பல்வேறுபட்ட

கட்சிகளில் ஆட்சிகள் ஆங்காங்கு அமைந்துள்ளதால்—இயங்க முனைந்துள்ள காலம் இது. இத்தகைய நேரத்திலே வெங்கட்ராமன் டில்லி செல்கிறார்.

பல்வேறு கட்சிகளிடையேயும் ஒன்றுபட்ட உணர்வையும், தோழமையையும் உருவாக்குவதில் அவர் பணி அவசியப்படும். இத்தகைய தொரு தோழமை உணர்வை ஏற்படுத்துவதில் தமிழகம் வெற்றி கண்டுள்ளது. இன்றைய விழாவே அதற்கொரு சான்று.

ஒரு கட்சியை மற்ற கட்சி தாழ்வாய்ப் பேசுவது ஜனநாயகம் அல்ல. இத்தனை நாள் ஆட்சி செலுத்தினீர்கள்; இது வரை போதும்; எங்களிடம் ஆட்சியை விடுங்கள். இன்னும் வேகமாகக் காரியங்களை நிறைவேற்றுகிறோம் என்று கூறுவதே ஜனநாயகமாக விளங்கும் தத்துவம்.

தமிழகத்திலே நாம் இவ்விஷயங்களில் உறுதியாக இருக்கிறோம்.

டாக்டர் லட்சுமணசாமியின் வாழ்க்கையே சிறந்த ஒரு எடுத்துக் காட்டு. அவரது வாழ்நாளில் எத்தனை விதமான அரசியல் லாபங்கள் அவரைத் தேடி வந்திருக்கும். அதற்கெல்லாம் அசைந்து கொடாமல் என் வழி நான் செல்கிறேன் என்று இருந்துவிட்டார். அலைபாயும் கடலில் திசைக்காட்டும் கருவியில் பார்வையைச் செலுத்தியபடி கலம் செலுத்தும் தேர்ந்த மாலுமி போல் டாக்டர் லட்சுமணசாமி இருந்துள்ளார்.

நாம் நமது குறிக்கோள்களில், நமது அரசியலில் உறுதியுடையவர்களாக இருக்கிறோம். அரசியல் ஸ்திரத்தன்மையும், உண்மை உணர்வும் இங்கு மிகுந்துள்ளது. மற்றவர்கள் நம்மிடமிருந்து பெறவேண்டிய பாடங்களில் இதுவும் ஒன்று.

இதையெல்லாம் நான் கூறக் காரணம், நண்பர் வெங்கட்ராமனிடம் இந்த குணங்கள் நிரம்ப உண்டு என்பதாலேயாகும். இந்தக் குணங்கள் எங்கு தேவைப்படுகிறதோ அந்த இடத்துக்கு வழங்குகிறோம், வெங்கட்ராமனை அங்கு அனுப்புவதன் மூலம்.

அவர்களிடமிருந்து நாம் பெறுவதெல்லாம் இங்கிருந்து அவர்கள் வரியாக எடுத்துச் சென்றதில் ஒரு பகுதியே.

நான் இனி ஒவ்வொரு மாதமும் கையில் ஒரு பட்டியலோடு டில்லியில் வெங்கட்ராமன் அறைக் கதவைத் தட்டுவதாக இருக்கிறேன்.

அப்படித் தட்டத் தேவையில்லை; கதவு திறந்தேயிருக்குமென்கிறார் வெங்கட்ராமன். கதவு திறந்தேயிருந்தாலும் தட்டி விட்டுத்தான் உள்ளே நுழைய வேண்டுமென்பது ஆங்கிலேயே முறை.

நாம் கொடுக்கும் திட்டங்களை திட்டக்குழுவின் சக உறுப்பினர் முன்வைத்து நமக்கு நியாயம் கிடைக்கச் செய்வார் என்று நம்புவோமாக!

வெங்கட்ராமன் தமது பதவியில் சிறப்பாகச் செயலாற்றும் பரிவு செலுத்துவோம்—தமிழ் மக்களின் நல்லெண்ணமே அவருக்குச் சிறந்த பக்கப்பலமாக இருக்கும்.

# ஏழைகளின் இதயத்தலைவர் ஜீவா

அருமைத் தலைவர் ஜீவாவின் புதல்வி உஷா தேவியின் இந்த மணவிழாச் செய்தி பத்திரிகைகளிலே வெளிவரும் போது அந்தச் செய்தியைப் படிக்கின்ற அனைவரும் மண மக்களை வாழ்த்துவார்கள். இந்த மணவிழா தமிழகம் முழுமைக்கும் மகிழ்ச்சி அளிக்கும் மணவிழாவாகும். காரணம், தமிழகத்திலுள்ள எல்லா மக்களின் நன்மதிப்பைப் பெற்று, குறிப்பாக ஏழை எளிய மக்களின் இதயங்களில் இடம் பெற்றவர் ஜீவாவாகும். அத்தகைய ஒப்பற்ற தலைவரின் புதல்வியின் திருமணத்தைத் தமிழகத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்கள் இல்லத்தில் நடைபெற்ற மண விழாவாகக் கருதி மகிழ்வார்கள்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் பெருத பேற்றை இந்த மணமக்கள் பெற்றிருக்கிறார்கள். காரணம்: இந்த விழாவை பெரியார் அவர்களே முன்னின்று நடத்துகிறார்கள்.

நான்கூடப் பெரியாரிடம் வரும்போது மணமான பின்னர் வந்தேன். எனக்குக்கூட அந்தப்பாக்கியம் கிடைக்க வில்லை.

ஒரு பெரிய குடும்பத் தலைவர் தனது இல்லத்தில் நடை பெறும் விழா நிகழ்ச்சியின்போது அமர்ந்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருப்பார். "அதோ அவன் என் மூத்தமகன் டாக்டர்! இவன் இரண்டாவது பையன் வக்கீல். அவன் மூன்றாவது பையன் என்ஜினியர்" என்று அவர்கள் ஓடியாடி வேலை செய்யும்போது பக்கத்திலிருப்பவர்களிடம் கூறிப் பூரிப்பார்.

அதே போலத்தான் பெரியார் அவர்கள் இங்கே பூரித்த நிலையிலிருக்கிறார்கள். இந்த மணவிழாவில் பல்வேறு கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் ஓடியாடி வேலை செய்ததைப் பார்த்து எல்லோரும் என் மக்கள்தான்; நம்மாலே பயிற்சி அளிக்கப்பட்டவர்கள்தான் என்று பெரியார் பெருமைப் படுவார்.

இந்தப் பெருமை உலகில் வேறு எந்தத் தலைவருக்கும் கிடைத்ததில்லை. பெரியார் அவர்கள் தமிழ் போல என்றும் இளமையோடு இருந்து எந்தக் குழந்தையும் தப்பிப்போகாமல்—அவர்கள் எந்தக் கட்சியில் எந்தத் துறையில் இருந்தாலும் அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சிக்கு மெய்யாகத் தொண்டாற்றும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும்—பார்த்துக் கொள்வார்.

என் பொதுவாழ்வில் நான் ஏற்றுக்கொண்ட ஒரே தலைவர் பெரியார். நான் அவரிடமிருந்து பிரிந்து சென்ற போது ஒன்றைக் குறிப்பிட்டேன்.

'நான் புதிய தலைவரைத்தேடி அய்யா அவர்களிடமிருந்து பிரிந்து செல்லவில்லை' என்று குறிப்பிட்டேன். அதே நிலையில் தான் இன்றும் இருக்கிறேன்.

குன்றக்குடி அடிகளார் இங்குப் பேசினார். அவர் எத்தனையோ மணமக்களை வாழ்த்திப்பேசியிருப்பார். ஆனால் அவருக்குத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டிருக்காது.

அதேபோல அடிகளார் கம்பீரமாகக் காட்சியளிப்பதைப் பார்த்து எந்த வாலிபருக்கும் அவரைப் போல் துறவியாக வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டிருக்காது; அவரவர்களுக்கு உள்ள கொள்கைப்படி நடப்பதும், என்ன நெறிமுறைகள் இருக்கின்றனவோ அவற்றை நிறைவேற்றுவதைக் கடமை

யார்க் கொண்டு நடத்துதலும் வேண்டும். நாம் வெவ்வேறு இலட்சியத்தில் சென்றாலும் ஒரு இலட்சியத்திற்கு வருபவர்கள்.

பெரியாரவர்களோடும் மற்றவர்களோடும் தம்முடைய லட்சியத்தை விட்டுக் கொடுக்காது பழகினாலும் தம்மைச் சந்தேகப்படுவதாக அடிகளார் குறிப்பிட்டார்கள். அதை அவர் குறிப்பிட்டபோது பெரியார்; அவர்களுடன் அரித் துவாரத்திற்குச் சென்றது நினைவுக்கு வந்தது.

மாலை நேரங்களில் பெரியார் கங்கை நதி தீரத்தில் உலாவச் செல்வார். வெண்தாடிப் பளபளக்க மஞ்சள் நிற சால்வை போர்த்திக் கொண்டு பெரியார் முன்னே செல் வார். அவர் எனக்குக் கம்பளிக் கோட்டு வாங்கித் தராத தால் குளிர் தாங்காமல் நான் கைகளை இறுக்கக் கட்டிக் கொண்டு அவர் பின்னாலேயே போவேன்.

இந்தக் காட்சியைப் பார்த்தவர்கள் பெரியார் அவர் களைப் பெரிய சாமியார் என்றும், என்னைச் சின்னச்சாமியார் என்றும் கருதிவிட்டார்கள். பெரிய சாமியாருக்கு இருக் கின்ற சக்தியில் சீடருக்குக் கொஞ்சமாவது இருக்காதா என்று கருதி என் காலிலும் பலர் விழுந்து கும்பிட்டார்கள்.

இங்கே நாங்கள் வேறுவிதமாகக் கருதப்பட்டாலும் அரித்துவாரத்திலிருந்தவர்கள் எங்களைச் சாமியார்களாகவே கருதி விட்டார்கள். அதேபோல் சிலர் சந்தேகப்படுவது இயல்பு.

நெடுந்தொலைவு போன மகன் திரும்பத் தந்தையைப் பார்க்க வரும்போது கையில் கிடைத்ததை வாங்கி வந்து தரு வான். அதே போல் இன்று பெரியாரைப் பார்க்க வந்த

நானும் ஒரு அன்புப் பரிசை—கனியை—ஏதோ என்னால் இயன்றதைக் கொண்டு வந்திருக்கிறேன்.

சுயமரியாதை இயக்கத் திருமணங்களை நடத்திச் சாதி ஒழிப்புக்காகப் பெரியார் பாடுபட்டு வருகிறார். பகுத்தறிவுத் திருமணங்களும் கலப்புத் திருமணங்களும் நாட்டில் ஏராள மாக நடைபெற்றிருக்கின்றன. இந்தத் திருமணங்களைச் செல்லுபடியாக்கச் சுயமரியாதைத் திருமணச் சட்டம் கொண்டுவரப் போகிறோம் என்ற நல்ல செய்தியை-அன்புப் பரிசை-கனியை பெரியாரிடம் அளிக்கிறேன்.

# மனித இனத்தின் ஊதியம்

உலகில் புகழ் வேண்டாம் என்று கூறுபவர்கள் மூன்று வகைப்படுவர். ஒன்று-புகழ் நமக்கு வராது என்று தெரிந்து கொண்டிருப்பவர்கள். இரண்டு - தேவைக்கு மேல் புகழைச் சேர்த்து வைத்திருப்பவர். மூன்று - புகழின் பயனை அறியாதவர்கள்.

ஆனால், ஈதல், இசைபட வாழ்தல் (புகழுடன் வாழ்தல்) ஆகியவைதான் மனித உயிருக்கு ஊதியம் என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவப் பெருந்தகை கட்டளையிட்டிருக்கிறார்.

அத்தகைய புகழ்வாழ்வை மேற்கொண்டவர் ராசா சர் முத்தையாச் செட்டியார் அவர்கள். நான் அவருடன் பல துறைகளில் சேர்ந்து பணியாற்றியிருக்கிறேன், வணிகத் துறை ஒன்றைத் தவிர! ஒரே அரசியல் கட்சியில் (ஜஸ்டிஸ் கட்சியில்) நாங்கள் அங்கம் வகித்திருக்கிறோம். என்னை அந்தக் கட்சியின் சார்பில் சென்னை கார்ப்பரேஷனுக்கு நிறுத்தி வைக்கக் கட்சியின் மேலிடத் தலைவர்கள் கூடிப் பேசினர்.

அப்போது சிலர் ''அண்ணாதுரை தேர்தலில் ஈடுபடும் அளவுக்கு வசதியான குடும்பத்தில் பிறக்கவில்லை'' என்ற ஆட்சேபம் தெரிவித்தார்கள். ஆனால் முத்தையா செட்டியார் அவர்கள்தான் ''இது போன்ற கண்ணோட்டம் இனிக் கூடாது. வாலிப வயதில் பொதுத் தொண்டில் ஆர்வம் இருப்பவர்கள்தான் இனித் தேர்தலில் நிற்க வேண்டும். ஆகவே அண்ணாதுரையை நிறுத்தலாம்'' என்று வாதாடி

னார். எதிர்கால அரசியல் எப்படி உருவெடுக்கும் என்பதை அப்போதே அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

அதுமட்டுமல்ல! இந்தி புகுத்தப்பட்ட நேரத்தில் வசதியான குடும்பத்தில் பிறந்திருந்தாலும், சென்னையிலுள்ள தங்கச்சாலையிலிருந்து ஐலண்டு மைதானம் வரை தமிழ்க் கொடியைத் தோளில் சுமந்து கொண்டு நடந்தார்.

இந்தத் தமிழ் இயக்கம் படிப்படியாக வளர்ந்து நாட்டை ஆள்கிற கட்சியாக வளர்ந்திருக்கிறது.

அன்று கொடி தூக்கியவர் என்ற முறையில் இப்போது பங்கு கேட்காத பண்பை—பெருந்தன்மையை நான் நினைத்து நினைத்துப் பெருமைப்படுகிறேன்.

தமிழ் ஆர்வம்—இந்திக்கு எதிர்ப்பு—மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் ஆகியவற்றை அவரது புதிய நண்பர்கள் எதிர்பார்த்தார்கள்; பழைய நண்பர்கள் பயந்தார்கள். ஆனால் அந்தக் கொள்கைகளை அவர் கைவிடவில்லை.

இதைப்பற்றி ஒருமுறை காங்கிரஸ் அமைச்சர் என்னிடம் ''அவரை எங்கள் கட்சிக்கு அனுப்பினீர்களே தவிர—உங்கள் கொள்கைகளுடன்தான் அனுப்பினீர்கள்'' என்று கூறினார்.

ஜனநாயகத்தில்தான் இப்படிப்பட்ட கருத்து வேற்றுமை இருந்தாலும், ஒத்துப்போகும் பண்பு இருக்கும். எல்லோரும் ஒரே கருத்துடன் இருப்பதல்ல சமத்துவம்.

ஒரே செடியில் பூத்தாலும் மலர்கள் அளவில் பெரியதும் சிறியதுமாகத்தான் இருக்கும்.

ஒரே மரத்தில் காய்த்தாலும் கனிகள் அளவில் பெரியதும் சிறியதுமாகத்தான் இருக்கும்.

ஒரே பழத்தில் ஒரு பக்கம் புளிப்பும்-மறுபக்கம் இனிப்பும் இருப்பதுண்டு,

இதைப் பற்றிக் கூறவந்த பேரறிஞர் வாங்கி ‘‘சமத்துவம் என்பது ஒரே தன்மையுடன் இருப்பது அல்ல!’’ என்றார்.

பலவிதமான கருத்துக்கள் இருந்தாலும்—ஒத்துப் போகும் பண்பு இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் ஜனநாயகம் இயங்குகிறது.

என் கருத்துக்கு நான் எவ்வளவு மதிப்புத் தருகிறேனோ அவ்வளவு மதிப்பு, பிறருடைய கருத்துக்கும் தரவேண்டும்! என் கருத்தை வலிவுபடுத்தும் வாதங்களைப் பிறர் எவ்வளவு தூரம் கேட்க வேண்டும் என்று நினைக்கிறோமோ அவ்வளவு தூரம் அவர்களது வாதத்தையும் கேட்கவேண்டும்.

இந்த அடிப்படையில்தான் பல நாடுகளில் அரசியல் முறை நடைபெறுகிறது. அந்த முறை இங்கே வரவேண்டும்.

# எங்களது புதிய வெளியீடுகள்

**C. N. அண்ணாதுரை**

உணர்ச்சி வெள்ளம்

கொள்கை விளக்கம்

நம் நாடு

புதிய வரலாறு

முக்கனி

**கலைஞர் கருணாநிதி**

தென் பாண்டிச் சிங்கம்

**சம்பந்தம்**

அழகும் ஆரோக்கியமும் வேண்டுமா ?

**வைத்திய ரத்ன ஜோதி மூர்த்தி**

பிணிதீர்க்கும் மூலிகைகளும் தாவரங்களும்

பலவித பிணிகளுக்கு
பயன் தரும் மருத்துவம்